விலை: 30.00
பக்கங்கள் : இருபத்தி நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

Dishtv
பழைய Dishtv ரிஸீவர்க்கு பதிலாக புதிய ரிஸீவர் 700/= மட்டுமே
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்சினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-5374)

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 26 சனிக்கிழமை (09.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 052

## சிறுமி ஒருவரை கடத்தி பாலியல் வன்புணர்ந்தவருக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 வருட சிறை
### யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)
சிறுமி ஒருவரை கடத்திச் சென்று பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய குற்றவாளி ஒருவருக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாத கால சிறைத்தண்டனை வழங்கி யாழ் மேல் நீதிமன்றில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. 23

### தமிழ்த் தேசிய எழுச்சி நாட்களில்
## யாழ். மாநகர எல்லைக்குள் களியாட்ட நிகழ்வுக்கு தடை

(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசிய எழுச்சி நாட்களில் யாழ்.மாநகரசபையின் எல்லைக்குள் களியாட்டம் உள்ளிட்ட கேளிக்கை நிகழ்வுகளை நடத்துவதை தடைசெய்வதற்காக மாநகர சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
யாழ்.மாநகரசபையின் மாதாந்த அமர்வு நேற்றுக்காலை நடைபெற்றது. இதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 23

## யாழ்.பல்கலை மாணவர்கள் வகுப்புப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை வகுப்புப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவனும், ஊடகவியலாளருமான ப.சுஜீவன், கலைப்பீடத்தின் 4 ஆம் வருட மாணவர்கள் சிலரால் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த வகுப்புப் புறக்கணிப்பு போராட் 02

# தமிழரின் உரிமையை நிலைநாட்ட
# கனடா தொடர்ந்து குரல் கொடுக்கும்



### கனேடிய எதிர்க்கட்சி தலைவர் அன்ரூ ஸ்சியர் தெரிவிப்பு

(ரொரன்டோ)
இலங்கைத் தமிழ் மக்களின் உரிமையை நிலை நாட்ட கனடா தொடர்ந்து குரல் கொடுக்கும் என கனேடிய எதிர்க்கட்சி தலைவர் அன்ரூ ஸ்சியர் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.சிறுப்பிட்டியில்
## வயல் கிணற்றில் இரு நாகபாம்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தின் வலிகாமம் கிழக்கு, சிறுப்பிட்டி வயல் கிணற்றில் தவறி விழுந்த சுமார் 5அடி நீளமான இரண்டு நாகபாம்புகள் அவ்வூர் விவசாயிகளால் மீட்கப்பட்டுள்ளன. 23

## நல்லூர் உற்சவத்தில் பாதுகாப்பு கமரா ஒப்பந்தத்தில் ஊழலா?
### விசாரணைக்கு மாநகர முதல்வர் உத்தரவு


(யாழ்ப்பாணம்)
நல்லூர் உற்சவகாலத்தின் போது ஆலயச் சூழலின் பாதுகாப்பிற்காக யாழ் மாநகரசபையினால் பொருத்தப்பட்ட பாதுகாப்புக் கமராக்களுக்கென ஒப்பந்த அடிப்படையில் குறித்த நிறுவனம் ஒன்றிற்கு வழங்கிய நிதியினை விட மேலதிகமாக 4 இலட்சத்து 16 ஆயிரத்து 280 ரூபாய் பணத்தினை குறித்த பாதுகாப்புக் கமராக்கள் பொருத்து வதற்கான செலவாகக் காட்டப் 23

## இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப அனைத்து சவால்களையும்
### வெற்றிகொள்ள நடவடிக்கை – ஜனாதிபதி



(கொழும்பு)
இளைஞர், யுவதிகளுக்கு சிறந்த எதிர்காலமொன்றை கட்டியெழுப்புவதிலுள்ள அனைத்து சவால்களையும் வெற்றிகொள்வதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
நேற்று பொலநறுவையில்தொழில் வழிகாட்டல் தேசிய மத்திய நிலையத்தின் முதலாவது மத்திய நிலையத்தை திறந்து வைக்கும் 23

### அலுக்கோசு பதவிக்கு
## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது



(கொழும்பு)
மரண தண்டனையை நிறைவேற்றும் அலுகோசு பதவிக்கு எதிர்வரும் திங்கள் முதல் விண்ணப்பம் கோரப்படவுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.
போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை செய்த 02

### யாழ். மாவட்ட செயலக முன்றலில்
## காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவுகள் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)
வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதி கோரியும் அவர்களின் உறவுகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இன்று யாழ்ப்பாணம் மாவட்டச்செயலக முன்றலில் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று 23

## இலங்கையின் உள்நாட்டு அரசியலில் சீனா தலையிடாது
### மகாநாயக்கர்களிடம் சீனத்தூதுவர் உறுதி

(கொழும்பு)
இலங்கையின் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் சீனா தலையீடு செய்யாது என்று அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்களிடம் சீனத் தூதுவர் செங்ஷியுவான் உறுதியளித்துள்ளார்.
அண்மையில் கண்டியில் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சீனத் தூதுவர் சந்தித் 24

## ஜனாதிபதி மைத்திரியின் பாராளுமன்ற உரைக்கு மனித உரிமை ஆணைக்குழு கடும் அதிருப்தி

(கொழும்பு)
இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மீது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் முன் வைத்த விமர்சனங்களால், ஆணைக் குழு அதிருப்தி வெளியிட்டுள்ளது. இது குறித்து, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு, மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவரான கலாநிதி தீபிக உடகம கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அநீதியான விமர்சனங்கள் காரணமாக நாங்கள் மனமுடைந்து போயுள்ளதுடன் உற்சாகமிழந்துள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி சிறைச்சாலையில் கைதிகள் தாக்கப்பட்ட விடயத்தில் மனித உரிமை ஆணைக் குழுவின் தலையீடு குறித்து கருத்து தெரிவித்துள்ளதை தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ள தீபிக உடகம சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களை 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விண்ணப்பம் கோர...

குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நடைமுறைப்படுத்தவுள்ள நிலையில், அலுகோசு பதவிக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் விண்ணப்பம் கோரப்படவுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள, போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு அந்த தண்டனையை செயற்படுத்துவதற்காக, ஜனாதிபதியினால் எடுக்கப்படும் தீர்மானங்களை இலகுபடுத்துவதற்காகவே மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பதவிக்கு எதிர்வரும் 25ம் திகதி வரையிலும் விண்ணப்பிக்கலாம் என்றும் 45 விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தூக்குமரத்தை செயற்படுத்துவதற்கு பதிலாக வேறு உபகரணங்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் சிறைச்சாலைகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.(ம-3)


## கட்டிட ஒப்பந்த வேலை

உங்கள் வீடுகள், கடைகள் குறித்த தவணையில் அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் மூலம் தரமாக அமைத்துக் கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் நாடுங்கள். லக்ஸ்மி கென்ஸ்ரக்சன்ஸ் நீர்வேலி தெற்கு. 076 171 1231, 077436 6704 வைபர்: 076 428 0010


## யாழ். பல்கலை...

டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் மாணவன் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்தும் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க கோரியும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அடையாள வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். (ம-3)


## சேவைநலன் பாராட்டு




### திரு.சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்

பிரதிக்கல்விப் பணிப்பாளர் – திட்டமிடல்
வலிகாமம் கல்வி வலயம்
(SLEAS II) (BA, PGDE, PGDEM, MA, MEd)

மனித நேயமும் நேர்
சிந்தனையும் மற்றவர்
நிலைக்குள்ளாகும் பண்பும்
கொண்டு வினைத்திறன் மிக்க
கல்விப் பணியாற்றி இன்று
(09.02.2019) சனிக்கிழமை
முதல் ஓய்வுபெறும் வலிகாம
வலய திட்டமிடல் பிரதிக்கல்விப்
பணிப்பாளரின் ஓய்வுக்காலம்
சிறப்பாக அமைய
மனதார வாழ்த்துகின்றோம்.

யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரிச்
சமூகம், சண்டிலிப்பாய்.

(சி-5427)


## அளவெட்டியில் வர்த்தக நிலையம் இனந்தெரியாதோரால் சேதம்



தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அளவெட்டி பிரதான வீதியிலுள்ள வர்த்தக நிலையம் நேற்று மாலை இனம் தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ம-110)


## பதவி வெற்றிடங்கள்

- அலுவலக செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- ஒப்புநோக்குநர் மற்றும் கணனி இயக்குநர் (ஆண்கள் – இரவுக்கடமை)
- கணனி மற்றும் இணையத்தள தரவேற்றுநர் (பெண்கள்)

தகைமையும் ஆர்வமும் உள்ளவர்கள் இன்றையதினம் (09.02.2019) சனிக்கிழமை 3.30 மணிக்கு நேரில் வரவும்

வலம்புரி, பொது முகாமையாளர்,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.


## பொது அறிவித்தல்

01. எமது சபையில் அனுமதி பெறப்படாது காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரப்பலகைகளுக்கு உரிய அனுமதியை உடனடியாக யாழ். மாநகர சபையில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தவறும் பட்சத்தில் குறித்த விளம்பரங்கள் சபையால் அகற்றப்படுவதுடன் அதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு மாநகர சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது என்பதையும் அறியத்தருகின்றேன்.

02. எமது சபைக்கு சொந்தமான குத்தகைக் கடைகளில் வைத்து விற்கப்படும் மற்றும் காட்சிப்படுத்தப்படுகின்ற பொருட்களை மாநகர சபையால் எல்லைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தினுள் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு இன்றி வைத்து மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தவறின் பொருட்கள் அனைத்தும் மாநகர சபையால் பறிமுதல் செய்யப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
யாழ். மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(சி-5426)

## மரண அறிவித்தல்



### மாப்பாணர் சங்கரப்பிள்ளை

தெல்லிப்பழை தையிட்டிபுலத்தை பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினையை வசிப்பிடமாகவும் கொண்ட மாப்பாணர் சங்கரப்பிள்ளை அவர்கள் நேற்று (08.02.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாப்பாணர் - கைராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - நேசரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும், சுகிர்தராணி அவர்களின் அன்புக்கணவரும், முருகதாஸ் (பதிவாளர் நாயக திணைக்களம் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), கலாவதி (லண்டன்), கிரிசாவதி விமலதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியபிரியா, வசிகரன், ஆலாலசுந்தரம், தேனுஜா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, சிவக்கொழுந்து, இராசம்மா, ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், யதுசா, கனுசா, லகிஷா, மதிசா, மதுசா, சிந்துசா, சங்கவி, லதிசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சந்திராதேவி, இந்திராதேவி, சங்கரலிங்கம், சத்தியபாமா, இராசபூபதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஈவினை விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினை.

தகவல்: குடும்பத்தினர்.
077 899 9740, 076 777 3323

(7463)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 2019.01.13 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் மார்க்கண்டு பராசக்தி (அப்பர் மாமி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை நாளை (2019.02.10) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியை 2019.02.12 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல. 05, 1-ம் பண்ணை,
கனகபுரம், கிளிநொச்சி.

(சி-5428)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# வெனிசுவெலாவின் நிலை இலங்கைக்கும் ஏற்படலாம்

## அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ரில்வின் எச்சரிக்கை

(கொழும்பு)

உலகில் தம்மால் அங்கீகரிக்கப்படாத, தமக்கு விசுவாசமற்ற நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா படையெடுப்புகளைக் மேற்கொண்டு வருகிறது.

அந்தவகையில், தற்போது வெனிசுவெலாவிற்கு நேர்ந்த நிலை எதிர்காலத்தில் இலங்கைக்கும் ஏற்படலாம் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா எம்.பி.எச்சரித்துள்ளார்.



வெனிசுவெலாவிற்கு எதிரான அமெரிக்காவின் ஏகாதிபத்திய தலையீட்டை கண்டித்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு முன்பு நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே




அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

"வெனிசுவெலாவில் மக்கள் ஏற்படுத்திய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக பல நாடுகள் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றன. இந்நிலையில், அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நாமும் இன்று போராட்டத்தில் குதித்துள்ளோம்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாக குரலெழுப்பி வரும் அமெரிக்கா, தேர்தலின் மூலம் சாதாரணமான முறையில் ஏற்படுத்தப்பட்ட வெனிசுவெலா அரசாங்கத்தைக் கவிழ்க்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்வாறானதொரு நிலைமை எதிர்காலத்தில் இலங்கைக்கும் ஏற்படலாம். எனவே, இப் பிரச்சினைக்கு அனைவரும் கைக்கோர்த்து எதிர்ப்பை வெளியிட வேண்டும்" எனத் தெரிவித்தார். (இ-4)

# தேசிய அரசு குறித்து ஊடகங்கள் மூலமே அறிந்து கொண்டேன்

## விதானகே விளக்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அமைக்கவுள்ள தேசிய அரசாங்கம் குறித்து கட்சி தனக்கு தெரியப்படுத்தவில்லை எனவும் ஊடகங்கள் வாயிலாகவே தான் தகவல் அறிந்து கொண்டதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்காத, கட்சியைக் கையாள முயற்சிக்கும் அணி ஒன்று இதன் பின்னணியில் உள்ளது. இது கவலைக்குரிய விடயம். இந்த அணியிடமிருந்து ஐக்கிய தேசியக் கட்சியைக் காப்பாற்ற வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி எந்தக் காரணம் கொண்டும் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் பொது வேட்பாளரை நிறுத்தக் கூடாது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை எதிர்பார்த்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தோளில் ஏறிச் சவாரி செய்ய முயற்சிக்கும் தலைவர்கள் கட்சிக்கு அவசியமில்லை எனவும் ஹேஷா விதானகே மேலும் தெரிவித்தார்.

மீண்டும் தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# 40 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சா சிக்கியது-இருவர் கைது



(பேலியகொட)

வாகனம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 40 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


பேலியகொடை பகுதியில் வைத்து நேற்றுக் காலை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

இந்நிலையில், அவர்களிடமிருந்து 400 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவைப் பொலிஸார் மீட்டுள்ளனர். (இ-4)




# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கத் தயார் - நவீன்

(கொழும்பு)



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கி அதன் மூலம் அவர்களின் சம்பளத்தை அதிகரிக்க முயற்சி எடுக்கப்படும் என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக முதலாளிமார் சம்மேளனத்துடன் நேற்றுமுன்தினம இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்துள்ள நிலையில், இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "நாம் எங்கள் கருத்துக்களைத் தெரிவித்தோம். அவர்கள் அதனை முற்றாக நிராகரிக்கவில்லை. தோட்ட மக்களின் பிரச்சினைகளைப் போன்று, தோட்ட நிறுவனங்களுக்கும் பிரச்சினை இருக்கின்றது. இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான ஒரு திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில், அதற்கு மேலதிகமான பணம் வழங்க முடியுமா என்ற கேள்வியும் எழுந்தது. ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளாமல் நாம் முன்னேறிச்செல்ல வேண்டியுள்ளது. ஒப்பந்தத்தை 60 வீதமான தொழிற்சங்கங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

எனினும், தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையில் நல்ல தீர்வைக் காணலாம் என நம்புகின்றோம். நிறுவனங்களின் பிரச்சினையை நாம் உணர்கின்றோம். இந்த இடத்தில் கொள்கை ரீதியாக அரசாங்கத்தால் தொழிலாளர்களுக்கு பணம் வழங்க நாம் தயார் என்ற நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ரோகித் 'ராஜ்யம்...' குர்னல் 'குதூகலம்'

## ஆக்லாந்தில் இந்தியா ஆனந்தம்

நியூசிலாந்து மண்ணில் இந்திய அணி முதல் 'ரி20' வெற்றியை பதிவு செய்தது. ஆக்லாந்து போட்டியில் 7 விக கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தியாவின் ரோகித் சர்மா, குர்னால் பாண்ட்யா அசத்தினர்.



சர்ச்சை கிளப்பிய ஆட்டமிழப்பு

நேற்று குர்னால் பாண்ட்யா வீசிய பந்தை (5.6வது ஓவர்) எதிர் கொண்டார் மிட்சல். பந்து காலில் பட்டதாக நடுவர் கிறிஸ் பிரவுன் (நியூசி.) எல்.பி.டபிள்யு., கொடுத்தார். இதை எதிர்த்து 'டி.ஆர்.எஸ்.,' முறையில் அப்பீல் செய்தார். 'ஹொட் ஸ்பாட்' தொழில் நுட்பத்தில் பந்து, துடுப்பில் பட்டுச் சென்றது தெரிந்தது. ஆனால் 'ஸ்னிக்கோ மீட்டரில்' பந்து துடுப்பில் பட்டதற்கான அதிர்வலைகள் எதுவும் தோன்றவில்லை. இதனால் 'டிவி' நடுவர் ஷோன் ஹெய்க் (நியூசி.,) ஆட்டமிழப்பு வழங்கினார்.

இதை ஏற்க மறுத்த அணித் தலைவர் வில்லியம்சன் நடுவர்களிடம் முறையிட்டார். 'இன்சைட் எட்ஜ்' ஆனதாக வாதிட்டார். ஏற்கெனவே ஆட்டமிழப்பு கொடுக்கப்பட்ட நிலையில் முடிவை மாற்ற முடியாது என தெரிவித்தனர். இந்திய அணித் தலைவர் ரோகித்தை அழைத்து 'ஏதாவது செய்யுங்கள்' என்றார் வில்லியம்சன்.

ஏனெனில் நடுவர் ஆட்டமிழப்பு வழங்கிய பிறகும், அது தவறு எனத் தெரிந்தால் களத்தடுப்பு செய்யும் அணித் தலைவர் சம்பந்தப்பட்ட வீரரை அழைத்து விளையாடச் செய்த சம்பவங்கள் இதற்கு முன் நடந்துள்ளன.

இதனால் ரோகித் பார்த்து, மிட்சலை அழைக்கலாம் என்ற நிலை இருந்தது. உடனே அங்கு வந்த 'சீனியர்' தோனி, வில்லியம்சன் மற்றும் நடுவர்களிடம் ஏதோ சொல்லி விட்டு, ரோகித்தை அந்த இடத்தில் இருந்து அழைத்துச் சென்று விட்டார். வேறு வழியில்லாத நிலையில் மிட்சல் (1) வெளியேறினார். விளையாட்டு உணர்வு, டி.ஆர்.எஸ்., தொழில்நுட்பத்தில் பிரச்சினை, நடுவர் தவறு என ஏராளமான சர்ச்சைகளை இச்சம்பவம் கிளப்பியது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' போட்டியில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் தோல்வியடைந்த இந்தியா, இரண்டாவது போட்டியில் கட்டாய வெற்றியை நோக்கி களமிறங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன் களத்தடுப்பை தேர்வு செய்தார். இரு அணியிலும் மாற்றம் செய்யப்படவில்லை.

**குர்னல் 'மூன்று'**

நியூசிலாந்து அணிக்கு செய்பெர்ட், மன்ரோ ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. புவனேஷ்வர் ஓவரில் பவுண்டரி, சிக்சர் அடித்த செய்பெர்ட் (12) அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார். குர்னால் பாண்ட்யா தனது முதல் ஓவரில் மன்ரோ (12), மிட்சலை (1) திருப்பி அனுப்பினார். தொடர்ந்து மிரட்டிய இவர், வில்லியம்சனை (20) வெளியேற்றினார்.

**கலீல் கலக்கல்**

பின் வந்த கிராண்ட்ஹோம், சகால் ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி விளாசினார். இவர் 28 பந்தில் 50 ஓட்டங்கள் எடுத்து ரோகித்திடம் 'பிடி" கொடுத்தார். விஜய் ஷங்கரின் 'சுப்பர் த்ரோ' காரணமாக ரொஸ் ரெய்லர் (42) ரன் அவுட்டானார். சான்ட்னர் (7), சௌதி (3) இருவரையும் கலீல் அகமட் போல்டாக்கினார்.

20 ஓவர்கள் நிறைவில் நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் குர்னால் பாண்ட்யா 3, கலீல் அகமட் 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

இந்திய அணிக்கு ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. பெர்குசன், ஸ்கொட் பந்துகளில் ரோகித் சிக்சர் அடிக்க, தவான் தன் பங்கிற்கு சௌதி பந்துகளில் பவுண்டரி விளாசினார். ரோகித் 16ஆவது அரைசதம் அடித்தார்.

முதல் விக்கெட்டுக்காக 79 ஓட்டங்கள் சேர்த்த போது ரோகித் (50) ஆட்டமிழக்க, அடுத்த சில நிமிடங்களில் தவானும் (30) வெளியேறினார். இந்திய அணி 12.3ஆவது ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

**ரிஷாப் விளாசல்**

மிட்சல் பந்தில் சிக்சர் அடித்த விஜய் ஷங்கர் (14) அவரிடமே வீழ்ந்தார்.

தோனி வந்த வேகத்தில் பவுண்டரி அடித்து ஓட்டக் கணக்கை ஆரம்பித்தார். இவரது 'அட்வைஸ்' கைகொடுக்க, சௌதி பந்தில் ரிஷாப் பன்ட் சிக்சர் அடித்து மிரட்டினார்.

இறுதியில் வெற்றிக்கான ஓர் ஓட்டத்தை ரிஷாப் பவுண்டரி மூலம் பூர்த்தி செய்ய, இந்திய அணி 18.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்கள் எடுத்து, 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நியூசிலாந்து மண்ணில் நடந்த 'ரி20' போட்டிகளில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் வெற்றி இது. தோனி (20), ரிஷாப் (40) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதன்மூலம் தொடர் 1:1என்ற கணக்கில் சமனிலையானது. இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி போட்டி நாளை ஹமில்டனில் நடக்கிறது.



ரோகித் சர்மா

**9**

சர்வதேச 'ரி20' அரங்கில் அதிக முறை 50 ஓட்டங்களுக்கும் மேல் எடுத்த ('இணைப்பாட்டம்') வரிசையில் 2வது இடத்தை இந்தியாவின் ரோகித், தவான் ஜோடி (9 முறை), அவுஸ்திரேலியாவின் வோர்னர், வோட்சனுடன் (9) பகிர்ந்து கொண்டனர். முதலிடத்தில் கப்டில், வில்லியம்சன் (11 முறை, நியூசி.,) உள்ளனர்.

## வீணான ஜெமிமா போராட்டம்

## கோட்டைவிட்ட இந்திய பெண்கள்



ஜெமிமா ரெட்ரிக்ஸ்

இறுதி பந்துவரை பரபரப்பை ஏற்றிய 2ஆவது 'ரி20' போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து பெண்கள் அணி 2:0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி ஒரு நாள் தொடர் தோல்விக்கு பழி தீர்த்தது. ஜெமிமாவின் அரைச்சதம் வீணானது.

நியூசிலாந்து சென்றுள்ள இந்திய பெண்கள் அணி மூன்று 'ரி20' போட்டிகள் கொண்ட தொடரில் மோதுகிறது.

முதல் போட்டியில் தோல்வியடைந்த இந்தியா, இரண்டாவது போட்டியில் கட்டாய வெற்றியை நோக்கி களமிறங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. இந்திய அணியில் மீண்டும் மிதாலி ராஜ் சேர்க்கப்படவில்லை.

**ஜெமிமா ஆறுதல்**

இந்திய அணிக்கு ஸ்மிருதி மந்தனா, பிரியா (4) ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. மந்தனா 36 ஓட்டங்கள் எடுத்தார். அணித் தலைவர் ஹர்மன் பிரீத் கவுர் (5) சொதப்பினார். தமிழகத்தின் ஹேமலதா (2) ஓட்டங்கள் எடுக்க ஓடிய போது கீழே விழுந்து இடது தோள்பட்டையில் காயம் அடைந்தார். இவர் 'ரிட்டயர்ட் ஹேர்ட்' முறையில் திரும்பினார். அடுத்து வந்த யாரும் ஒற்றை இலக்க ஓட்டங்களை தாண்டவில்லை. ஜெமிமா மட்டும் 53 பந்து களில் 72 ஓட்டங்கள் எடுத்தார்.

20 ஓவர்கள் நிறைவில் இந்திய பெண்கள் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

**சுஜீ கலக்கல்**

நியூசிலாந்து அணியை சோபி (19), கேட்லின் (4) கைவிட்டாலும் அணித் தலைவர் சாட்டர்வெயிட் (23) சற்று உதவினார். சுஜீபேட்ஸ் 62 ஓட்டங்கள் எடுத்தார்.

கடைசி ஓவரில் நியூசி லாந்து அணியின் வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன. முதல் பந்தில் பவுண்டரி அடித்த கேட் (13) 2ஆவது பந்தில் போல்டானார்.

இறுதி நான்கு பந்துகளில் 5 ஓட்டங்கள் எடுக்கப்பட நியூசிலாந்து அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இவ் வெற்றி மூலம் நியூசிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரை ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையில், 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான போட்டி நாளை ஹமில்டனில் நடைபெறுகிறது.


## மரண அறிவித்தல்



### கிருஷ்ணபிள்ளை கந்தசாமி

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
முன்னாள் இணைப்பாளர் - புனர்வாழ்வு அமைச்சு)

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் புதிய செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை கந்தசாமி அவர்கள் நேற்று *(08.02.2019)* வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-5434)

புதிய செங்குந்த வீதி.
திருநெல்வேலி கிழக்கு. யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 021 221 9734

# ஈழத்தில் இயல்புநிலை திரும்பவில்லை மகிந்தவுக்கு கர்நாடகாவில் எதிர்ப்பு!

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்திற்கு கர்நாடக தமிழ் மக்கள் இயக்கம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

கர்நாடகத் தமிழ் மக்கள் இயக்கத்தின் தலைவர் சி.இராசன், செயலாளர் ப.அரசு ஆகியோர் மகிந்தவின் வருகைக்கு கண்டன அறிக்கை விடுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குறித்த அறிக்கையில்,

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊடக நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக இன்று 9.ஆம் திகதி பெங்களூருக்கு வருகை தரத் திட்டமிட்டுள்ளார்.

அவரது வருகையை கர்நாடகத் தமிழர்களின் சார்பில் கடுமையாகக் கண்டிக்கின்றோம்.

60 ஆண்டுகால வரலாறு கொண்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கை என்ற பொய்யான பரப்புரையின் பேரில் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடந்த இறுதிப்போரில் ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

ஆயிரக்கணக்கானோர் காணாமல் போனோர் பட்டியலில் உள்ளனர். தமிழர்களின் இன அழிப்புப்போரை திட்டமிட்டு நடத்தி 10 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்னும் ஈழத்தில் இயல்பு நிலை திரும்பவில்லை.


அநாதைகளாக வெளியேறிய ஈழத்தமிழர்கள் உலகின் பல நாடுகளில் அகதிகளாக எண்ணற்ற பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஈழத்திலுள்ள தமிழர்களோ இலங்கை அரசின் இராணுவக் கட்டுப்பாட்டில் பிணைக் கைதிகளைப் போல நடத்தப்பட்டு வருகின்றனர்.



இதற்குக் காரணமான ராஜபக்ஷவை தமிழர்கள் பெருமளவில் வாழும் கர்நாடகவில் அனுமதிக்கக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## ஒரு கிலோ கொக்கேய்னுடன் இந்தியப் பிரஜை கைது!





(கொழும்பு)

ஒரு கிலோ கிராம் கொக்கேய்ன் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

34 வயது இந்தியப் பிரஜையொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 15 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய கொக்கேய்ன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (இ-4)

## பொருளாதாரத்தை வலுப்படுத்தி எதிர்காலச் சந்ததிக்கு ஊழலற்ற சமூகத்தைக் கையளிப்பதே எனது எதிர்பார்ப்பு

### அமைச்சர் சாகல தெரிவிப்பு

(பல்லேகம)

கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளின் கல்வி நிலையிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியிருப்பதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



இதனால், இப்பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு அனைவரும் ‘ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

பல்லேகம பாடசாலையின் இல்ல விளையாட்டு போட்டி நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“கிராமத்து பாடசாலை பிள்ளைகளின் கல்வியிலேயே எம் நாட்டின் எதிர்காலம்தங்கியுள்ளது. எனவே, கல்வியுடன் விளையாட்டிலும் ஈடுபட்டு இப்பிள்ளைகளின் ஒழுக்கம் மற்றும் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்கு எம்மாலான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

‘அத்துடன், இப்பாடசாலையை ‘அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை’ எனும் வேலைத்திட்டத்தில் உள்வாங்கி பாடசாலைக்கு தேவையான புதிய கட்டடங்களை நிர்மாணித்து, பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்திச் செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

இப்பிரதேச அமைச்சர் என்ற வகையில் இக்கிராமங்களிலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்து பிள்ளைகளின் கல்வித் தரத்தை முன்னேற்ற வேண்டிய தேவை எனக்குள்ளது. பிரதேச மக்களின் வாழ்க்கையை இலகுவாக்கும் பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை மேம்படுத்தி கிராமங்களை அபிவிருத்திச் செய்து பொருளாதாரத்தை வலுப்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு ஊழலற்ற சமூகத்தை கையளிப்பதே என்னுடைய எதிர்பார்ப்பாகும்" என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-4)


## ஈரவிழிகளுடன் 35 வது நாள்

அமரர். திருமதி.ஆனந்தசுந்தரம் யோகேஸ்வரி

தோற்றம் 1937.11.18 | மறைவு 2019.01.05



அன்புத் தெய்வமே எங்களை
ஆறாத்துயரத்தில் ஏங்க வைத்து
எங்குதான் சென்றீர்களோ
நெஞ்சம் கலங்கி கண்கள்
குளமாக கண்ணீர் சொரிகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்
தியாகராஜா - மங்களநாயகி
சுகந்தனா ,தவலக்ஷன்
பிரியந்தனா ,பவித்திரா

கருவேலடி, ஒழுங்கை
கொக்குவில்,
கிழக்கு.


## இராசி பலன்

**மீனம்:** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசனசுகமுண்டு.

**மேடம்:** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அரசு வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

சந் | செவ் | புத | ராகு | சூரி, கேது | சனி, சுக் | குரு

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்

உத்தரம், அத்தம்

09.02.2019

தை 26, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

சதுர்த்தி முற்பகல் 10.26 மணிவரை

உத்தரட்டாதி பிற்பகல் 3.34 மணிவரை

சுபநேரம் 3.35-5.05 மணிவரை

இராகுகாலம் 9.35-11.05 மணிவரை

வளவன்

**கடகம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, உடல் நலன் சீராகும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மகரம்:** உடன்பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** சில பிரச்சினைகளைக் கண்டு காணாமலும் இருப்பது நல்லது, நடப்பதெல்லாம் நன்மைகேயென நினைக்க வேண்டிய நாள் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** தொழில் சம்பந்தமாக அனுபவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக்கனவுகள் நனவாகலாம்.

**துலாம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் எருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, விரும்பிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

# தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தால் கற்றல் ஊக்குவிப்பு நிதியம் ஆரம்பம்





(சாவகச்சேரி)

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தால் வசதி குறைந்த மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு நிதிய ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி. ம.டயாளினி, கௌரவ விருந்தினராக பிரித்தானிய நாட்டின் தென்மராட்சி அபிவிருத்திக் கழக உறுப்பினர் ம.ஸ்ரீதாஸன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் தென்மராட்சியிலுள்ள பாடசாலை அதிபர்களால் தெரிவு செய்யப்பட்ட 50மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டது.

மாதாந்தம் 2500ரூபாய் வீதம் 24 மாதங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிதியை தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் பிரித்தானியா கிளையினர் வழங்கியுள்ளனர்.

நிகழ்வில் முன்னாள் அதிபர் அ.கைலாயபிள்ளை, பாடசாலை அதிபர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (இ-30)

# கிருபாகரனுக்கு பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி பொது அமைப்புக்களால் அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகராக சிறந்த சேவையாற்றி ஓய்வு பெற்ற த.கிருபாகரனுக்கான பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

கைதடி மேற்கு இணுங்கித்தோட்ட அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் செ.மயூரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரெட்ணம் உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரும் சமூக சேவைகள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளருமாகிய திருமதி.நளாயினி இன்பராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், தென்மராட்சி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் செல்வி.க.வினோஜிதா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தயேந்திரன், தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அலுவலர் வி.சண்முகநாதன்,ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம்,கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் தலைவர் லயன்.ப.செல்லத்துரை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-7)

# தீர்மானங்களைச் செயற்படுத்துவதில் தவிசாளர் ஆர்வம் காட்டவில்லை

## உறுப்பினர் ஐங்கரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்குப்பிரதேச சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை செயற்படுத்துவதில் தவிசாளர் ஆர்வம் காட்டவில்லை என சபை உறுப்பினர் இ.ஐங்கரன் குற்றம் சாட்டியுள்ளார்.

பிரதேச சபையில் பொது மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் தவிசாளரே அத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அக்கறை காட்ட வேண்டுமெனத் தெரிவித்தார். தீர்மான இல.45. மதுபானசாலையின் வியாபார உரிமம் இரத்தாக்கல்.

இத் தீர்மானம் 14.06. 2018 அன்று சபையில் நிறைவேற்றப்பட்டபோதும் குறித்த மதுபானசாலை வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்தார்.

இந்தமதுபானசாலைஅமைந்துள்ள பகுதியில் மதத்தலம், பாடசாலை, சந்தைத் தொகுதி என்பன காணப்படுகின்றமையால் குறித்த தீர்மானம் தொடர்பில் தவிசாளர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

தீர்மான இல. 13, போதைப் பொருள் விற்பனை தொடர்பாக 29.10.2018 அன்று பாடசாலைகள், பொது இடங்களுக்கு அருகாமையில் (500m) விற்பனை செய்வதை தடுப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

தீர்மான இல. 09, பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பொது இடங்களில் வெடிகொளுத்துவதற்கெதிரான தீர்மானம் 28.11.2018 நிறைவேற்றப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையெனத் தெரிவித்தார்.

எனவே பிரதேச சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களின் நோக்கத்தை அனைவரும் புரிந்து கொண்டு மக்களுக்காகச் செயற்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தவிசாளரிடம் கேட்ட போது, தீர்மானங்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்க முடியாதென்றும் நிர்வாக ரீதியான அணுகுமுறையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். (இ-9-10)

# இலக்கியச் சந்திப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இனிய நந்தவனம் மாத சஞ்சிகை, ஊற்று வலையுலகக் கலைஞர்கள் மன்றம், யாழ்.இலக்கியக் குவியம் இணைந்து நடத்தும் இலக்கியச் சந்திப்பு நிகழ்வு நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்ப்பாணம், வேம்படி வீதி யாழ்.றிம்பர் மண்டபத்தில் ஊற்று வலையுலகக் கலைஞர்கள் மன்றத்தலைவர் த.ரூபன் தலைமையில் நடைபெறும்.

இதில் இலங்கை-இந்தியப் படைப்பாளர்கள் கலந்து கொள்வதுடன் நூல் அறிமுகமும் இடம்பெறும். (இ-5)

# துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் நெடுந்தீவிலுள்ள பதினேழு குடும்பங்களுக்கு சுயதொழில் மேற்கொள்ளுவதற்கும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்குமாக பதினேழு துவிச்சக்கர வண்டிகளை நேற்று நெடுந்தீவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காரியாலயத்தில் வைத்து வழங்கினார்.

குறித்த நிகழ்வில் நெடுந்தீவு பிரதேசசபைத் தவிசாளர் பற்றிக் றொஷான், நெடுந்தீவு பிரதேசசபை உறுப்பினர் சிந்தைகுலநாயகி அனுஷாந்தன், கட்சி உறுப்பினர் அருள்ஜீவன், சமூக ஆர்வலரும் பிரித்தானியாவில் வசிப்பவருமான தர்மலிங்கம் மணிபல்லவன் ஆகியோர் கலந்து சிறப்பித்து, இரண்டு இலட்சத்து 65 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான 17 துவிச்சக்கர வண்டிகளை வழங்கினர். (இ-7)

# முத்தமிழ் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலகம், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் மாபெரும் முத்தமிழ் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய அரங்கில் யாழ்.பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார்.(இ-5)

# உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியிலிருந்து உயர் தரப் பரீட்சைக்கு இரண்டாம் தடவையாக தோற்றும் மாணவர்கள் கல்லூரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 22.02.2019 (வெள்ளிக்கிழமை) முன்னதாக படிவத்தை பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வருகை தரும் மாணவர்கள் கல்லூரி சீருடையுடனும் அடையாள அட்டையுடனும் வருகை தரவும் எனவும் அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# மனவளக்கலைப் பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மனவளக் கலை அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

தினமும் மாலை 5 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காய கல்ப பயிற்சிகள் வழங்கப்படும். மேலதிக தகவல்களுக்கு 0212222772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கரவெட்டி துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் சோ.புஸ்பாகரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)



கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் 10 பேருக்கு அவர்களது கற்றல் காலம் முழுவதும் வித்தியாசாலையூடாக மாதாந்த உதவி வழங்கும் நிகழ்வும் மரம் நடுகையும் நேற்று நடைபெற்றது. (படங்கள்:- தாவடிச் செய்தியாளர்)

# அரசு சாரா உயர் கல்வி நிறுவனங்களின் பட்டப் படிப்புக்களைத் தொடர 4500பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

அரசு சாரா உயர் கல்வி நிறுவனங்களின் பட்டப் படிப்புக்களைத் தொடர்வதற்காக 4500 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இது தொடர்பாக உயர் கல்வி அமைச்சின் உதவிப் பணிப்பாளர் வாசனா பெரேரா தெரிவிக்கையில், பட்டப் படிப்புக்களைத் தொடர்வதற்கான வட்டியில்லா கடன் பெறுவதற்கு நான்காயிரத்து 500 பேருக்கு அதிகமானவர்கள் விண்ணப்பித்துள்ளனர். வட்டியில்லா கடன் பெறுவதற்கு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

2017ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்று, பொதுப் பரீட்சையில் 30 இற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்ற பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்க முடியும்.

இந்தக் கடன் திட்டத்தில் குடும்ப வருமானமும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அரசு சாராத பத்து உயர் கல்வி நிறுவனங்களில் அரச அங்கீகாரம் பெற்ற 50 கற்கை நெறிகளை தொடர்வதற்கு கடன் வழங்கப்படவுள்ளது. (இ-4)

## கொழும்பில் ஹெரோயினுடன் இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பில் இரு பதிகளில் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போதே குறித்த சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

# துப்பாக்கியைக் காட்டி கொலை அச்சுறுத்தல் விடுத்த இருவர் கைது

(சீதுவை)

துப்பாக்கியைக் காண்பித்து கொலை செய்யப் போவதாக அச்சுறுத்தல் விடுத்த இரண்டு பேரை சீதுவை பொலிஸார் நேற்றுக்காலை கைது செய்துள்ளனர்.

சீதுவை லியனகேமுல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்கு வானில் வந்த சந்தேக நபர்கள், துப்பாக்கியை காண்பித்து வீட்டு உரிமையாளரை கொலை செய்யப் போவதாக அச்சுறுத்தியுள்ளனர்.

இது குறித்து சீதுவை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடம்இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் அதற்கான 19 தோட்டாக்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். பணப் பிரச்சினை காரணமாக இந்த சம்பவம் நடந்துள்ளது.

ஜா-எல பிரதேசத்தை சேர்ந்த 32 மற்றும் 35 வயதான சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-4)


## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் வருடாந்த பொதுக்கூட்டம் - 2019

மேற்படி பொதுக்கூட்டம் நாளை 10.03.2019 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு தொண்டைமானாறு நிலையத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் பிரேரணைகள் இருப்பின் 24.02.2019 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**செயலாளர்,**
**வெளிக்கள நிலைய அலுவலகம்,**
**133 செம்மணி வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**இ.குகானந்தன்**
**செயலாளர்.**

(7456)


# போதை ஒழிப்பு நிகழ்வு




(அளவெட்டி)

போதையற்ற தேசம் என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கு ஏற்ப அளவெட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை ரி.ஐ.ரி .கல்வி நிலையத்தினால் போதை ஒழிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது. இந் நிகழ்வில் காங்கேசன்துறை போதைப்பொருள் தடுப்பு பொறுப்பதிகாரி எஸ். நிதர்சன் கலந்து கொண்டார். (இ-110)

# விவசாயத்தை ஊக்குவிக்க 7 வாய்க்கால்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் 7 வாய்க்கால்கள் புனரமைக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.நிசாந்தன் தெரிவித்தார்.

20 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இத் திட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தேவதுறுவு வாய்க்கால், அளவெட்டிதெற்குகிழுவானை வாய்க்கால், சங்கானை கிழக்கு வழுக்கை ஆறு வாய்க்கால், வேலணை வடக்கு மண்கும்பான் வாய்க்கால், அரியாலை கிழக்கு நாவலடி வாய்க்கால், வரணி தின்புருவில் வாய்க்கால் மற்றும் மாவில் வாய்க்கால் என்பன புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

இத் திட்டம் தொடர்பிலான முன்மாதிரிகளை தங்கள் பிரதேசங்களிலுள்ள கமநால சேவை நிலையங்களில் பார்வையிட முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)


## திருவண்ணை நகர் கன்னாதிட்டி அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்-2019

அம்பிகை அடியார்களே!

எல்லாம் வல்ல அன்னை அருள்மிகு காளி அம்பாளின் பேரருட் கருணையின் துணை கொண்டு நிகழும் விள்ம்பி வருடம் தைத்திங்கள் 27 ஆம் நாள் (10.02.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

அடியார்கள் அன்னையின் மஹோற்சவ காலத்தில் பக்திப் பேருவகையுடன் பங்குபற்றி அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியின் பேரருட் கருணையை பெற்றின்புற வேண்டுகின்றோம்.

17.02.2019 - ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழா
18.02.2019 - திங்கட்கிழமை தேர்த்திருவிழா
19.02.2019 - செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம்
20.02.2019 - புதன்கிழமை பூங்காவனத்திருவிழா

**தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்**

(7454)


## இரவு 8 மணிவரை சந்தை இயங்கும்

(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தையை பொதுமக்களின் நலன் கருதி இரவு 8மணிவரையும் திறந்து வியாபாரம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விவசாயிகள் அதிகாலை 4 மணிக்கு பொருட்கள் கொண்டு வந்து விற்பனை செய்வதற்கான ஒழுங்குகள் செய்யவுள்ளதாகவும் சந்தை ஒப்பந்தக்காரர் தெரிவித்துள்ளார். (இ-60)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:B.Ed, அரசஆசிரியர்
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ: B/9248

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: செவ் 2 இல்
உயரம்:158cm
தகைமை/தொழில்:O/L, தனியார் தொழில்
எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில்
தொ.இ: B/9249

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா: செவ் 2 இல்
உயரம்:158 cm
தகைமை/தொழில்:A/L,Australia
எதிர்பார்ப்பு:வெளிநாடுPR
தொ.இ: B/9250

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: செவ் 7 இல்
உயரம்:165 cm
தகைமை/தொழில்: A/L,வியாபாரம்
எதிர்பார்ப்பு: உள்நாடு
தொ.இ: B/9253

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/9278

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:LLB
எதிர்பார்ப்பு:Doctor,Engineer,Lawyer, Accountant,பட்டதாரி,ஆசிரியர், பட்டதாரி
தொ.இ; G/9282

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு,விவாகரத்தும் ஏற்கப்படும்
தொ.இ: G/9284

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா: 49 செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L, ஆசிரியர்
எதிர்பார்ப்பு:O/L
தொ.இ: G/9287

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# 100 ஆவது பிறந்த தினவிழா

## யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் (1971-1975)

## அமரர் இ.சபாலிங்கம்



நூற்றாண்டை நினைவுகூரும் நேரம்... கல்வி
நுட்பத்தில் நிபுணரை நாம் போற்றுகின்றோம்!
ஆற்றலுடை ஆழுமை சேர் அறிஞர், இந்து
அன்னை புகழ் ஒளிர வைத்து வரலாற்றேட்டில்
வீற்றிருக்கும் ஒரு சிலரில் முதல்வர்! எங்கள்
விடிவெள்ளி, வழிகாட்டி, பண்பில் செல்வர்,
ஏற்றமிகு சபாலிங்கம் அதிபர் நாமம் இசைத்து
யாழ்.இந்து அன்னைப் பெருமை காப்போம்!

Happy 100 Birthday

பழைய மாணவர் பேரவை யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பலரின் முகத்திரையை கிழிக்க ஜனாதிபதி அதிரடி நடவடிக்கை

## சூடுபிடிக்கும் கொழும்பு அரசியல்



(கொழும்பு)

**போதைப்பொருள் கடத்தல், விற்பனை விடயத்தில் அதிரடி நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தயாராகி வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.**

கடந்த கால அரசியல் நடவடிக்கைகள் காரணமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செல்வாக்கு வெகுவாக குறைந்திருந்தது.

எனினும், அண்மையில் டுபாயில் பாதாள உலகக் குழுவினர் கூண்டோடு கைது செய்யப்பட்டமை மற்றும் தொடர்ச்சியாக போதைப்பொருட்கள் மீட்கப்படுகின்றமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஜனாதிபதியின் செல்வாக்கு மீண்டும் படிப்படியாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தேசிய புலனாய்வுச் சேவை விசேட அறிக்கையொன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் உத்வேகம் அடைந்துள்ள ஜனாதிபதி போதைப்பொருள் விடயத்தில் அதிரடி நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக போதைப்பொருள் வியாபாரத்துடன், தொடர்புடைய அரசியல் மற்றும் சமூகத்தின் முக்கிய புள்ளிகளை அம்பலப்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தயாராகி வருவதாகவும் அந்த தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதன் காரணமாக கொழும்பு அரசியல் களம் மீண்டும் சூடுபிடிக்க தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள குற்றவாளிகளுக்கு எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் தண்டனை நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

அத்துடன், டுபாயில் கைது செய்யப்பட்டுள்ள பாதாள கோஷ்டி தலைவர் மாகந்துரே மதூஷ் உள்ளிட்டவர்களை இலங்கைக்கு அழைத்து வருவது குறித்தும் ஜனாதிபதி காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அறியமுடிகின்றது. (இ-4)

# நகரசபை உறுப்பினர்களுக்கு சமாதான நீதவான் பதவி




(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதவான் முன்னிலையில் சமாதான நீதவான்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் இ.சிவமங்கை உள்ளிட்ட 16 உறுப்பினர்கள் இவ்வாறு சமாதான நீதவான்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (இ-30)

# அரச ஊழியர்களின் வாகன இறக்குமதிக்கு 3 மாதங்களுக்குள் அனுமதி வழங்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் எரான் தெரிவிப்பு



(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் இறக்குமதி உரிமப்பத்திர பிரச்சினை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு நாடாளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அரச ஊழியர்களுக்கான வாகன இறக்குமதி இரத்துச் செய்யப்படவில்லை. அதனை தற்காலிகமாகவே இடை நிறுத்தியிருக்கிறோம்.

வெளிநாட்டு கையிருப்பை பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட நடைமுறை சாத்தியமான நடவடிக்கையாக இது அமைந்துள்ளது. அத்துடன் ஜனவரி மாதத்தில் பெருமளவு கடனைச் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் நாட்டின் தேவையை கருத்திற் கொண்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அரச ஊழியர்களுக்கான வாகன உரிமப்பத்திரம் இடைநிறுத்தப்படவில்லை. வாகன இறக்குமதியே இடைநிறுத்தப்பட்டுள்ளது. உரிமப்பத்திரமுள்ள அனைவருக்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். அதன்படி எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும்" எனத் தெரிவித்தார். (இ-4)

# பால்மாவில் பன்றிக்கொழுப்பு வெளிநாட்டுக்கு அனுப்பி பரிசோதனை

## நுகர்வோர் அதிகார சபை தகவல்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் பன்றிக்கொழுப்பு, மரக்கறி எண்ணெய் மற்றும் லக்டோ கலப்படங்கள் உள்ளதாக நுகர்வோர் அதிகார சபைக்கு இதுவரையில் எந்தவித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லையென நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கலப்படங்கள் செய்யப்பட்ட பால்மா இறக்குமதி செய்யப்படுவதாக கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் பிரதியமைச்சர் புத்திக பத்திரன தெரிவித்ததை யடுத்தே அறிந்துகொண்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளில் கலப்படம் இருப்பதாக பாராளுமன்றத்தில் முறைப்பாடுகள் முன் வைக்கப்பட்டன.

அத்துடன், அமைச்சர் றிசாத் பதியுதீனும், பிரதியமைச்சர் புத்திக் பத்திரனவும் நுகர்வோர் அதிகார சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனால், இறக்குமதி செய்யப்பட்ட பால்மா வகைகளை ஆய்வு செய்வதற்காக வெளிநாட்டு ஆய்வுகூடங்களுடன் தொடர்புகளை மேற்கொண்டுள்ளோம். தேசிய ரீதியிலுள்ள ஆய்வுகூடங்களில் அதிநவீன தொழில்நுட்ப வசதிகள் இல்லாமையினாலேயே சர்வதேச ஆய்வுகூடங்களை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாங்கள் தேசிய ரீதியில் முயற்சிகளை மேற்கொண்டோம். ஆனால் அவற்றிடம் அதி நவீன தொழில்நுட்ப வசதிகள் இல்லை எனத் தெரிவித்தன.

சர்வதேச ஆய்வுகூடத்தில் பால்மா வகைகளின் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கலப்படங்கள் உள்ளன என கண்டுபிடிக்கப்பட்டால் குறிப்பிட்ட பால்மா நிறுவனங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், அது மனித பாவனைக்குதவாத பால்மா வகை என்றால் தடைசெய்யப்படும்.

கிடைக்கப்பெறும் சர்வதேச ஆய்வுகூட அறிக்கை சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகார சபையின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களில் எந்தவித கலப்படமும் இல்லையென சுகாதார அமைச்சர் நேற்று முன்தினம் உறுதிப்பட பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் எழுந்ததன் பின்னர் உத்தியோகபூர்வமாக ஆய்வுகள் எதுவும் உரிய முறையில் இடம்பெறாத நிலையில், இவ்வாறு உறுதியாக கூறியுள்ளமை பொதுமக்களிடத்தில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விசா இன்றி தங்கியிருந்த 9 இந்தியப் பிரஜைகள் கைது

(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறி இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 9 இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, பொரலந்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இலங்கையில் தங்கியிருப்பதற்கான விசா அனுமதி இருக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-4)

## பாதாள உலகக்குழுவுடன் தொடர்புடைய


# அமல் பெரேரா, ரயன் வென் ரொயனின்

# வீடுகளில் அதிரடிப் படையினர் சோதனை!

### கொக்கேய்ன் வில்லைகள், டிஜிற்றல் அளவுமானி மீட்பு

(கொழும்பு)

**பாதாள உலகக் குழுத் தலைவன் மாகந்துரே மதூஷுடன் டுபாயில் கைது செய்யப்பட்ட பாடகர் அமல் பெரேரா மற்றும் நடிகர் ரயன் வென் ரொயன் ஆகியோரின் வீடுகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சோதனையிட்டுள்ளனர். இதன்போது அமல் பெரேராவின் மஹரகமையில் உள்ள வீடொன்றில் வைத்து கொக்கேய்ன் வில்லைகளும், ரயன் வென் ரொயனின் வீட்டிலிருந்து பொதி ஒன்றும் டிஜிற்றல் அளவுமானி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.**



இதேவேளை நடிகர் ரயன் வென் ரொயனின் சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடகர் அமல் பெரேராவின் சகோதரர் சொஹான் பெரேரா நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார் என பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பாதாள உலகக்குழு தலைவர் உள்ளிட்ட தரப்பினர் தற்போது டுபாயில் உள்ள அப்ஹில் அல் முல்லா பிளாசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில், சந்தேகத்துக்குரியவர்களின் குருதி மாதிரி, டுபாய் பொலிஸாரால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மாகந்துரே மதூஷ் என அறியப்படும் சமரசிங்க ஆராச்சிலாகே மதூஷ் லக்ஷித உள்ளிட்ட 25 பேர் கடந்த 5 ஆம் திகதி அதிகாலை டுபாயில் உள்ள நட்சத்திர விருந்தகம் ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# வடிவேல் சுரேஷை யார் என்றே தெரியாது!

## மனோகணேசன் கூறுகிறார்



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷை யார் என்றே தெரியாது என அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். இந்நிலையில், சிலரை தெரியாமல் இருப்பது நல்லது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு பம்பலப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை குறித்து அன்று பேச்சுவார்த்தை இடம்பெற்ற போது ஏன் வாயை மூடிக்கொண்டிருந்தீர்கள் என இன்று சிலர் கேள்வியெழுப்புகின்றனர்.

அன்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கம் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களுமே இதற்குக் காரணம்.

அவர்களுக்கு 1000 ரூபா சம்பளத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தோம். இந்தப் பேச்சுவார்த்தையில் நாங்கள் தலையிட்டிருந்தால் இன்று எங்கள் மீது பழிசுமத்தப்பட்டிருக்கும்.

ஆகையினாலேயே அமைதியாக இருந்தோம். எனினும், அவர்களால் 20 ரூபாய் சம்பள அதிகரிப்பையே பெற்றுக் கொடுக்க முடிந்தது. இந்நிலையில், இப்போது அவர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

இதேவேளை எங்களால் சம்பள அதிகரிப்பைப் பெற்றுக் கொடுக்க முடியும் என அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷை சம்பளப் பிரச்சினையுடன் தொடர்புபடுத்தி கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்மனோகணேசன் "வடிவேல் சுரேஷ் யார் என்றே எனக்குத் தெரியாது" எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## போதைப்பொருள் விழிப்புணர்வு



(சாவகச்சேரி)

தென்மராட்சியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சாவகச்சேரி பொலிஸாரால் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு அண்மையில் நடைபெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சராவகச்சேரி மகளிர் கல்லூரி, நாவற்குழி மகா வித்தியாலயம், டிறிபேக் கல்லூரி உள்ளிட்ட பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள்களால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது. சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் உபபொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் வளவாளராகக் கலந்து கொண்டார். (இ-30)

# முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் குறித்து பாராளுமன்றத்தில் விசேட கலந்துரையாடல்



(கொழும்பு)

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் தீர்மானமெடுக்கும் முக்கிய கலந்துரையாடல் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாராளுமன்ற குழு அறையில் நடைபெற்றது.

ஷரீஆ சட்டத்துக்கு முரணாகாத வகையில், முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இதன்போது இணக்கம் காணப்பட்டது.

அதேவேளை, நாடு முழுவதிலும் காணப்படும் காதி நீதிமன்றங்களை ஒரே வலையமைப்பின் கீழ் கொண்டுவந்து, திருமணம் சம்பந்தமான பிரச்சினைகளை இலகுவாக கையாள்வதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டன.

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு சார்பில் நீதியரசர் சலீம் மர்சூப் தயாரித்த ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், அமைச்சர் றிசாத் பதியுதீன், இராஜாங்க அமைச்சர்களான செய்யித் அலிஸாஹிர் மௌலானா, எச்.எம்.எம். ஹரீஸ், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூப், ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, ஜம் இய்யத்துல் உலமா சபை தலைவர் ரிஸ்வி முப்தி, உலமாக்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 75 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 200 | 180 | 250 |
| தக்காளி | 70 | 80 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 30 | 60 |
| கோவா | 20 | 60 | 45 | 60 |
| கரட் | 80 | 100 | 80 | 140 |
| பூசணி | 30 | 30 | 35 | 40 |
| புடோல் | 80 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 50-150 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 160 | 110 | 60 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 200 |
| லீக்ஸ் | 100 | 110 | 70 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 120 | 120 | 70 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 550 | 600 | 800 |
| போஞ்சி | 60 | 70 | 70 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | - | 50 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 50 | 100 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 160 | 120 | 110 | 120 |
| வெங்காயப்பூ | 40 | 70 | 60 | 80 |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 15 | 40 |
| வல்லாரை | 30 | 30 | 10 | 20 |
| ஈரப்பலா | – | - | 110 | 80 |

# வடக்கில் பாடசாலைகளிலிருந்து இடை விலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

## ஏனைய மாவட்டங்களைவிட மன்னாரில் அதிகம்

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாணத்தில் பாடசாலையிலிருந்து இடை விலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புத் திணைக்களத்தின் புள்ளிவிபரத்தகவலிலிருந்து தெரியவருகிறது. கடந்த ஆண்டுகளை விட 2018 ஆம் ஆண்டு வடக்கில் உள்ள ஏனைய மாவட்டங்களை விட மன்னார் மாவட்டத்தில் மாணவர் இடைவிலகல் சடுதியாக அதிகரித்துள்ளதாக குறித்த புள்ளி விபரத்தின் மூலம் தெரியவருகிறது.

கடந்த 2018 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் 28 மாணவர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 மாணவர்களும் மன்னார் மாவட்டத்திலிருந்து 33 மாணவர்களும் வவுனியா மாவட்டத்தில் இருந்து 19 மாணவர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 29 மாணவர்களும் மொத்தமாக 118 மாணவர்கள் பாடசாலையில் இருந்து இடை விலகியுள்ளனர்.

அதே போன்று கடந்த 2017 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 41 மாணவர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 13 மாணவர்களும் மன்னார் மாவட்டத்திலிருந்து 09 மாணவர்களும் வ்வுனியா மாவட்டத்திலிருந்து 11 மாணவர்களும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 20 மாணவர்களும் மொத்தமாக 94 மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர் என அந்த புள்ளி விபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# கால்நடைகளை உரிய முறையில் பண்ணையாளர்கள் பராமரிக்க வேண்டும்

## அரச அதிபர் அருமைநாயகம் அறிவுறுத்து

கிளிநொச்சி மாவட்டத்தில் காலப் போகப் பயிர்ச் செய்கையின் போது கால் நடைகளை உரிய முறையில் பராமரிக்க வேண்டுமென மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை கால் நடைகளைப் பண்ணையாளர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

தற்போது இடம் பெற்று வரும் நெல் அறுவடை நிறைவடையும் முன்பே கால் நடைகள் அவிழ்த்து விடப் பட்டதாக முறைப்பாடுகள் கிடைத்ததாகத் தெரவித்தார்.

எனவே காலபோக செய்கை தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி பண்ணையாளர்கள் நடந்து கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார். இத் தீர்மானத்தை மீறும் பண்ணையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படும் எனவும்அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-315)

# வடக்கில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் அழிவடைந்த உப உணவு பயிர்களுக்கு நட்டஈடு வழங்கப்படாதது ஏன் ?

## நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி.கேள்வி

(கொழும்பு)

அண்மையில் வடக்கில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஏற்பட்ட அனர்த்தத்தில் நெற் செய்கையல்லாத அழிவடைந்துள்ள ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கும் இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இடம் பெற்ற கேள்வி நேரத்தின் போது விவசாயம், கிராமிய பொருளாதாரம், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் பி. ஹரிசனிடமே இவ்வாறு வலியுறுத்தியுள்ளர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் வடக்குமாகணத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சுமார் 50 ஆயிரம் ஏக்கர் வரையிலான பயிர்ச் செய்கைகள் அழிவடைந்துள்ளன. ஆயிரக் கணக்கில் கால்நடைகள் அழிந்துள்ளன. பல விவசாய குளங்கள் சேதமுற்றுள்ளன. விவசாய மற்றும் கடற்றொழில் சார்ந்த வீதிகள் சேதமடைந்துள்ளன. கல்லாறு, சுண்டிக்குளம், தட்டுவன்கொட்டி போன்ற கடலோரப் பகுதிகளில் கடற்றொழில் உபகரணாங்களும் படகுகளும் சேதமடைந்துள்ளன எனத் தெரிய வருகின்றன.

நெற்செய்கை அழிவடைந்திருந்தால், ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா வீதம் காப்புறுதி சபையால் வழங்கப்படுமென அமைச்சர் ஹரிசன் தெரிவித்துள்ளதாக ஊடகச் செய்திகள் குறிப்பிட்டன. இந்த நிலையில் சுமார் 1,500 ஏக்கர் கடலை, சுமார் 10 ஹெக்டயர் சோளம் போன்ற பயிர்ச் செய்கைகளும் ஏனைய உப உணவுப் பயிர்ச் செய்கைகளும் அழிவடைந்துள்ளன. இம் மக்கள் கடந்த கால வறட்சி காரணமாக மிகுந்த தொழில் பாதிப்புகளுக்கு உட்பட்ட நிலையிலேயே



விவசாய செய்கையை மீண்டும் ஆரம்பித்திருந்த நிலையில், மேற்படி வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது என்பதால், இவர்களுக்கான இழப்பீட்டுத் தொகைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இந்நிலையில் பின்வரும் கேள்விகளை முன்வைக்கின்றேன்.

அழிவடைந்துள்ள நெற் செய்கைக்கான கொடுப்பனவு உரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு, ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா வீதம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா?

இல்லை எனில், எப்போது வழங்கப்படும்.?

நெற் செய்கையல்லாத அழிவடைந்துள்ள ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கு எவ் வகையிலான இழப்பீடுகள், எப்போது வழங்கப்படும்?

சேதமடைந்துள்ள விவசாய மற்றும் கடற்றொழில் சார்ந்த வீதிகள் மற்றும் விவசாயக் குளங்கள் என்பன எப்போது மீளமைக்கப்படும்?

சேதமடைந்துள்ள கடற்றொழில் உபகரணங்கள் மற்றும் படகுகளுக்கான இழப்பீடுகள் எப்போது வழங்கப்படும்?

அழிவடைந்துள்ள கால் நடைகளுக்கான இழப்பீடுகள் என்ன? அது எப்போது வழங்கப்படும்.?

குறித்த கேள்விகளுக்கான பதில்களையும் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்களையும் கௌரவ அமைச்சர் பி. ஹரிசன் வழங்குவார் என எதிர்பார்க்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# 14 இலட்சம் ரூபா தீக்கிரை





(மன்னார்)

தலைமன்னார் பியரில் அதிகாலையில் கடை ஒன்று தீப்பற்றியுள்ளது. அயலவர்கள் தீயை அணைக்க எடுத்த முயற்சி கைகூடாதபோதும் அருகிலுள்ள வீடுகள் பாதுகாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை தலைமன்னார் பியர் கேபிள் கவுஸ் பகுதியில் அதிகாலை ஐந்து மணியளவில் பல சரக்கு கடை ஒன்று திடீரென எரிந்து கொண்டிருந்ததைக் கண்ட அயலவர்கள் தீயை அணைக்க முயற்சித்தனர். இருந்தும் அந்த முயற்சி பயனளிக்கவில்லை.

கட்டடம் உட்பட 14 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் சேதம் அடைந்துள்ளதாகக் கடை உரிமையாளர் எம்.பாலசுப்பிரமணியம் தலை.மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (இ-285)

# இஸ்ரேல், இத்தாலி நாட்டவர்கள் இலங்கையில் கொக்கேய்ன் விற்பனை

(கந்தானை)

கொக்கேன் ரக போதைப் பொருட்களுடன் இத்தாலி மற்றும் இஸ்ரேல் நாட்டுப் பிரஜைகள் இருவர் நேற்று முன்தினம் கந்தானை புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பேலியகொட குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களிடமிருந்து 60 கிராமும் 970 மில்லி கிராம் கொக்கேன் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இஸ்ரேலியர் 25 வயதுடையவர் எனவும் இத்தாலி நாட்டவர் 36 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனவரி மாதம் இலங்கைக்கு வந்த இந்த வெளிநாட்டவர்கள் இருவரும் குறுகிய காலத்துக்குள் தங்கல்ல, ஹிக்கடுவ மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்கு கொக்கேன் ரக போதைப் பொருள் விநியோகித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)



# ஏ-9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

(தம்புள்ள)

ஏ-9 பிரதான வீதியில் தம்புள்ள - லேனதொர பகுதியை மறித்து தம்புள்ள பன்னம்பிட்டிய - ஸ்ரீ மலியதேவ ஆரம்ப பாடசாலையின் மாணவர்கள் மற்றும் பெற்றோரும் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்காக நிரந்தர ஆசிரியர் ஒருவரை கோரியே இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. (இ-4)

# ஜனநாயகப் போராட்டங்களை ஒடுக்கவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## ஆனந்தன் எம்.பி.எச்சரிக்கை



(வவுனியா)

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமுலாக்குவதன் ஊடாக ஜனநாயகக் குரல்களை நசுக்கி ஒட்டுமொத்தமாக எம்மீது அடிமைசாசனத்தை எழுதுவதற்குத் தயாராகும் பெரும்பான்மையின் நாசுக்கான நகர்வினை உடன் தடுத்து நிறுத்துவதற்கு அனைத்து தரப்புக்களும் பேதமின்றி ஒன்றிணைய வேண்டும் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் உயர்நீதிமன்றத்தில் வியாக்கியானத்திற்காக பாராளுமன்றத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையிலும் அதுகுறித்து ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா வெளியிட்டுள்ள அதிர்ச்சியூட்டும் தகவல்கள் தொடர்பில் கவனம் செலுத்தி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனால் விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்கான ஆயுதப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த காலத்தில் அது பயங்கரவாதமாகச் சித்திரிக்கப்பட்டது. ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு தற்போது பத்தாண்டுகளாகின்ற போதும் சத்தமின்றி யுத்தமொன்றை மேற்கொள்வதற்கான பயங்கரவாத தடைச்சட்டம் வலிந்து அமுலாக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக தொடர்ச்சியான எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டு வருகின்ற நிலையில் அந்தச் சட்டத்தை மாற்றி சர்வதேச நியமனங்களுக்கு உட்பட்டு புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டுவரவுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது. அத்துடன் சர்வதேச ரீதியில் பயங்கரவாதம் தலைதூக்கி வருவதால் அத்தகைய சட்டமொன்று அவசியம் என்றும் காரணம் கற்பித்தது.

இத்தகைய பின்னணியில், 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி மேற்படி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு தற்போது உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது அதன் பாரதூரத் தன்மையை அறிந்திருந்த எம்மினத்தினைச் சேர்ந்த சட்ட வல்லுநர்கள் அமைதியாகவே இருந்துள்ளனர். ஜனநாயகத்திற்காக குரல் கொடுக்கின்றோம் செயற்படுகின்றோம் என்று மக்கள் முன்னிலையில் வார்த்தை ஜாலம் செய்பவர்கள் ஜனநாயகத்தை முற்றாக நக்கும் இத்தகைய சட்டம் தொடர்பில் தற்போது வரையிலும் மௌனம் காப்பது பாரிய ஐயத்தினை ஏற்படுத்துகின்றது.

இது இவ்வாறிருக்கையில், மேற்படி சட்டம் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்திற்கு பின்னர் மீண்டும் பாராளுமன்றத்திற்குக்கொண்டுவரப்பட்டு விரைந்து அமுலாக்குவதற்கு திரைமறைவில் அமைதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இந்தச் சட்டத்தை அமுலாகிய பின்னர் ஜனநாயகப் போராட்டங்களை செய்பவர்கள், ஜனநாயகவாதிகள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் உட்பட சாதாரண மனிதர்களால் குரலை உயர்த்தி பேசக்கூட முடியாத சூழ்நிலை தான் ஏற்படப்போகின்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி, கே.வி.தவராஜாவின் கருத்துப்படி, எந்தப் பொலிஸ் அதிகாரிக்கும் அல்லது ஆயுதப்படை உறுப்பினருக்கும் அல்லது ஒரு கரையோரப் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும் எந்தவொரு பிரஜையையும் சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதி என்று கருதமுடிவதோடு பிடியாணையின்றி எவரையும் கைது செய்வதற்கும் வெறும் சந்தேகத்தின் பேரில் அமைவிடங்கள் "பயங்கரவாதச்" செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்ற அடிப்படையில் அவ்விடத்திற்குள் பிரவேசிப்பதற்கும் தேடுதல் செய்வதற்கும், புதிய சட்டம் அனுமதி வழங்குகிறது.

அதுமட்டுமன்றி, இந்தப் புதிய சட்டத்தில் ஒருவரை தடுத்து வைத்தல் ஆணையைப்பற்றி கேள்வி எழுப்புவதற்கு நீதவானுக்கு அதிகாரம் காணப்படாததோடு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும், பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிக்கும் அதிகாரங்கள் அதிகமாக வழங்கப்படுவதோடும் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்களும் குறைக்கப்படுகின்றன. இதனால் அதிகார வர்க்கங்கள் அதிகாரத் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவதை வலுப்படைவதற்கே வழிசமைக்கப்பட்டுள்ளது.

விசாரணையில் இருக்கும் போது சித்திரவதையை அனுபவித்தால் மீண்டும் விசாரணையாளர்களிடத்திலேயே முறையிட வேண்டிய நிலைமைகள் இருப்பதானது திருடன் கையில் சாவியைக் கையளிப்பதைப் போன்று தான் உள்ளது. ஆகவே சாட்சிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகின்றது.

இதனை விடவும், மரண தண்டனை, குற்ற ஒப்புதல் வாக்குமூலம், தடுத்து வைத்து விசாரணை செய்தல் ஆகியனவும் மிகவும் ஆபத்தானதாகவே உள்ளது. மிக முக்கியமாக ஒரு பெண்ணை ஆண் பொலிஸ் அல்லது பாதுகாப்புப் படை வீரர் கைது செய்வதற்கு கூட இச்சட்டத்தில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

வரவிருக்கும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மிகவும் மோசமானது என்று சர்வதேச வல்லுநர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது சர்வதேச தரத்திற்கு உட்பட்டதல்ல என்றும் இது ஏற்கனவே நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விடவும் ஆபத்தானது என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதனை எமது மக்கள் பிரதிநிதிகளாகவும் சட்டத்தரணிகளாகவும் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்காமல் இருப்பதும் எமது மக்களிடமும் இந்நாட்டு மக்களிடமும் இதன் ஆபத்துக்களை எடுத்துச் சொல்லாமல் இருப்பதும் எமக்கு பாரிய சந்தேகங்களை எழுப்புகிறது.

இந்த நாட்டில் உரிமைக்கான போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்திரித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுலாக்கி தற்போதுவரையில் தமிழர்கள் மீது அச்சட்டத்தை பாய்ச்சுவதற்கும் இடமளித்துக் கொண்டிருக்கும் அரசாங்கம், எதிர்காலத்தில் அச்சட்டத்தையும் விட வலிமையான சட்டமொன்றை புதிய பெயரில் அமுலாக்கி ஒட்டுமொத்த இனத்தின் மீதும் அடிமைச்சாசனம் எழுதுவதற்கே முயற்சி செய்கின்றது.

ஆகவே இத்தகைய பாரிய பின்விளைவுகளைக் கொண்ட சட்டத்தை அமுலாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நாசுக்கான நடவடிக்கைகளை உடன் தடுத்து நிறுவதற்கு அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் ஜனநாயகத்தின் பால் செயற்படும் அனைத்துத் தரப்பினரும் பேதமின்றி ஒன்றிணையுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுகின்றேன். மேலும் இதுதொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து எமது கட்சி துறைசார் வல்லுநர்களுடன் ஆராய்ந்து விரைவில் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)



## நிர்வாகிகள் தெரிவு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இயங்கும் கலை இலக்கிய அமைப்பான மன்னார் தமிழ்ச்சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தின் போதே இந்தப் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

அதன்படி புதிய தலைவ்ராக அருட்திரு. தமிழ்நேசன் அடிகளாரும், முதுநிலைத் துணைத் தலைவராக செ.அ.ராதா பெனாண்டோவும், துணைத்தலைவராக சந்திரலிங்கம் றமேஸ்ஃம், பொதுச் செயலாளராக அ.ச. மாக்ஸ் மில்லன் குரூஸ்ஃம், நிர்வாகச் செயலாளராக அ.பிலிப் புப் பிள்ளையும், நிதிச் செயலாளராக ஜனாப் கலீல் மு்கமது நஜீமும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-285)

# வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் நிவர்த்தியாகும்

## இராஜாங்க அமைச்சர் பைசல் உறுதி

(மன்னார்)

மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளில் நிலவுகின்ற பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், மேலதிக தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் சுகாதாரத் துறையை மேம்படுத்துவது தொடர்பில் இராஜாங்க அமைச்சருக்கும் மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரிகளுக்கும் இடையில் சுகாதார இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்தில் கடந்த 6 ஆம் திகதி கலந்துரையாடல் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 5 கோடி ரூபாய் பெறுமதியான ct scanner இயந்திரம், தேவையான கருவிகள் மற்றும் ct scanner இற்கான ஒரு கோடி செலவிலான கட்டடம் ஆகியவற்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

சிலாவத்துறை வைத்தியசாலைக்கு வைத்தியர், தாதியர் மற்றும் வைத்திய ஆலோசகர் விடுதியை நிர்மாணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நானாட்டான், அடம்பன் உள்ளிட்ட மேலும் பல வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்வதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கலந்துரையாடலில் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் எஸ்.என்.ஹில்ரோய் பீரிஸ், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் ஒஸ்மன் டேனி, வடமாகாண சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் தெழிலன், உயிரியல் வைத்திய பொறியியலாளர் நிரோஷினி ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-285)

## அபிவிருத்தி உதவித்திட்டம் குறித்து

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு கருத்தமர்வு

(மன்னார்)

வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம் தொடர்பில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு கருத்தமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த விழிப்புணர்வு கருத்தமர்வில் மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை மற்றும் முசலி பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உபதவிசாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்ததோடு, நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் நகர சபை மற்றும் பிரதேச ச்பைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதோடு, உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-285)

# இடப்பெயர்வு தொடர்கிறது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில், விசுவமடுப் பகுதியில் தொட்டியடிக் கமக்கார அமைப்பின் பகுதிகளான, டி-3 மற்றும் மேட்டுப்பிட்டி உள்ளிட்ட பல பகுதிகளுக்குள் காட்டு யானைகள் இரவில் புகுந்து அட்டகாசம் செய்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் தாம் வாழிடங்களைவிட்டு வெளியேற வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அப்பகுதி மக்கள் தமது நிலைமைகளை தெரியப்படுத்தியதையடுத்து வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது அப்பகுதி மக்கள் தமது பகுதிக்குள் நுழையும் யானைகளை தடுக்க பாதுகாப்பு வேலியை விரைவுபடுத்தி அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்பில் தொட்டியடிக் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகளில் ஒருவரான க.குலசிங்கம் தெரிவிக்கையில்,

டி-3, தொட்டியடிப் பகுதியில் இரவு 7 மணி தொடக்கம் யானையின் அட்டகாசத்தால் மக்கள் குடிபெயரும் நிலையில் உள்ளனர்.

நாங்கள் வருடாவருடம் தோட்டங்கள் மற்றும் வயல் செய்து, தென்னைகள் வைத்து வருகின்றோம், ஆனால் தொடர்ச்சியாக யானைகள் அழித்துச் செல்கின்றன.

இதைவிட யானைகள் மக்களைத் தாக்க முற்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இதனால் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்ததன் விளைவாக உரிய திணைக்களத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டது. அந்தவகையில் இரண்டு மாதங்களுக்கு முன்பதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் வந்து எமது பகுதிகளைப் பார்வையிட்டு, வேலி அமைப்பதற்குரிய அடையாளப்படுத்தல்களை மேற்கொண்டுவிட்டுச் சென்றனர்.

வேலி அமைத்துத் தருவதாகவும் கூறினார்கள், ஆனாலும் இன்னும் வேலி அமைக்கும் பணிகளில் முன்னேற்றம் எதுவும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை.

யானைகளுடைய அட்டகாசமானது தாங்க முடியாமல் இருக்கின்றது. இதனால் இப்பகுதியில் வசிக்கின்ற குடும்பங்கள் ஒவ்வொன்றாக வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு விரைவுபடுத்தி பாதுகாப்புவேலியை அமைத்துத்தருமாறு, சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித்தார். (இ-281)

# பாரதம்

## மோடியின் ஆட்சிக்கு எதிராக மாணவர் அமைப்புக்கள் போராட்டம்



(டில்லி)
மோடி அரசாங்கத்திற்கு எதிராக, இந்திய தலைநகர் டில்லியில் மாணவர் அமைப்புக்களினால் மாபெரும் எதிர்ப்பு போராட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

சிறந்த கல்வியையும் வேலை வாய்ப்பினையும் வழங்கக் கோரி இப்போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், பல்வேறு ஆர்ப்பாட்டங்களும் கவனயீர்ப்பு போராட்டங்களும் அதிகரித்துள்ளன.

அந்தவகையில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை மோடி அரசாங்கத்திற்கு எதிராக, இந்திய தலைநகர் டில்லியில் மாணவர் அமைப்புக்களினால் மாபெரும் எதிர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பல்வேறு பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் மாணவ அமைப்புக்கள் இணைந்து உருவாக்கிய "இளம் இந்தியா தேசிய ஒருங்கிணைப்பு" என்ற அமைப்பினால் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

செங்கோட்டையிலிருந்து, நாடாளுமன்ற வளாகம் வரை பேரணியாகச் சென்ற மாணவர்கள், நாடாளுமன்ற வளாகத்திற்கு எதிரில் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். (4)

## ஆஸிக்கான நேபாளத்தூதுவர் இராஜினாமா

(கன்பரா)
அவுஸ்ரேலியாவுக்கான நேபாளத் தூதுவர் லக்கி ஷெர்பா மனிதக் கடத்தல் குற்றச்சாட்டையடுத்து பதவி விலகியுள்ளார்.



தனக்கு எதிராக கூறப்பட்ட குற்றச்சாட்டுகளில் உண்மையில்லையென மறுத்துள்ள அவர், நல்லெண்ண அடிப்படையில் பதவி விலகியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

லக்கி ஷெர்பா மனித கடத்தலில் ஈடுபட்டுள்ளார் என இவரது சாரதியான வாங்சூ ஷெர்பா, கடந்த ஆண்டு டிசெம்பரில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து இதுதொடர்பாக விளக்கமளிப்பதற்காக நாட்டிற்குத் திரும்பும்படி லக்கியை நேபாள அரசாங்கம் கேட்டுக் கொண்டது.

இந்நிலையில், லக்கி ஷெர்பா தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். இதற்கான கடிதத்தை நேபாள வெளிவிவகார அமைச்சுக்கு அவர் அனுப்பிவைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், "எனக்கு எதிராக கூறப்பட்ட குற்றச்சாட்டுகளில் எந்தவித உண்மையுமில்லை. நல்லெண்ண அடிப்படையிலேயே நான் பதவி விலகியுள்ளேன். என்னை பதவி விலகும்படி யாரும் எனக்கு நெருக்கடி கொடுக்கவில்லை" என்று தெரிவித்துள்ளார். (4)

## ஐ.எஸ். பயங்கரவாதிகள் தோற்கடிக்கப்படுவார்கள்

### ட்ரம்ப் தெரிவிப்பு



(வோஷிங்டன்)
ஈராக், சிரியாவில் அடுத்த ஒரு வார காலத்துக்குள் ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிகள் முழுமையாக விடுவிக்கப்படும். அவர்கள் முற்றிலும் தோற்கடிக்கப்படுவார்கள் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சிரியா மற்றும் ஈராக்கை புகலிடமாகக் கொண்ட ஐ.எஸ். பயங்கரவாதிகள் உலக நாடுகளில் கால் பதித்து பயங்கரவாதத் தாக்குதல்களை நிகழ்த்தினர். இவர்களின் கொட்டத்தை ஒடுக்க அமெரிக்கா தலைமையில் சர்வதேச நாடுகள் ஈராக் மற்றும் சிரியாவில் வான் தாக்குதல்களை நடத்தத் தொடங்கின.

இந்த நிலையில், கடந்த டிசெம்பர் மாதம் சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டனர் என்று தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அங்கிருந்து தங்கள் நாட்டுப் படைகளை 30 நாட்களுக்குள் திரும்பப்பெறவுள்ளதாகவும் அறிவித்தார்.

ஆனால், சில முக்கிய பாதுகாப்புத்துறை அதிகாரிகளின் பதவி விலகல், குடியரசுக் கட்சியினர் மற்றும் நட்பு நாடுகளின் எதிர்ப்பு ஆகியவற்றால் ட்ரம்ப் தனது முடிவை தாமதப்படுத்தினார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வோஷிங்டனில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசிய ட்ரம்ப், "ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் இடம்பறிபோய் விட்டது. ஐ.எஸ்.அமைப்பின் பீடம் தகர்க்கப்பட்டு விட்டது. அடுத்த ஒரு வார காலத்துக்குள் ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிகள் முழுமையாக விடுவிக்கப்படும். அவர்கள் முற்றிலும் தோற்கடிக்கப்படுவார்கள்" என்று தெரிவித்தார்.

அதேசமயம் அமெரிக்க பாதுகாப்புத்துறை கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், "தொடர்ச்சியான அழுத்தம் இல்லாது போனால் அடுத்த 6 முதல் 12 மாதங்களுக்குள் சிரியாவில் மீண்டும் ஐ.எஸ். அமைப்பு தலைதூக்கும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## சத்தீஸ்கரில் துப்பாக்கிச்சூடு 10 நக்சலைட்டுகள் உயிரிழப்பு

(சத்தீஸ்கா)
சத்தீஸ்கர் மாநிலம் பிஜாப்பூரில் பாதுகாப்புப் படையினருடன் நடந்த மோதலில் நக்சலைட்டுகள் 10 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

அத்தோடு 'அவர்களிடமிருந்து 11 ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பிஜாப்பூர் பொலிஸ் அத்தியட்சகர் மோகித் கார்க் தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கரில் நச்சலைட்டுகளின் ஆதிக்கம் மிகுந்த பிஜாப்பூர் மாவட்டத்தில் சிறப்பு பாதுகாப்பு படையினர் மற்றும் மத்திய பொலிஸார் தேடுதல் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இதன்போது இரு தரப்புக்கும் இடையே நடந்த மோதலில் 10 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (4)

## பத்திரிகையாளர் ஜ... திட்டமிட்டு நடத்...

(றியாத்)
பத்திரிகையாளர் ஜமால் கொலை சவுதி அதிகாரிகளால் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளதாக ஐ.நா.குழு நடத்திய விசாரணையில் வெளியிட்ட முதல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சவுதி பத்திரிகையாளர் ஜமால் துருக்கியில் உள்ள சவுதி தூதரகத்தில் கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்திய ஐக்கிய நாடுகள் சபை தனது முதல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையில், "சவுதி அரேபியாவின் அதிகாரிகள் திட்டமிட்டு மிருகத்தனமாக ஜமாலைக் கொலை செய்துள்ளனர்.

மேலும் சவுதி, துருக்கி அரசு இந்தக் கொலை குற்றத்தை விசாரிக்க அனுமதி அளிக்காமல் 13

## ஆர்ஜென்டீனா கால்ப... எமிலியானோவின் சடலம் க...

(கார்டிப்)
அர்ஜென்டினா கால்பந்து வீரர் எமிலியானோ சலா பயணம் செய்த விமானம் மாயமானதையடுத்து, தற்போது அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.





ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரர் எமிலியானோ சலா, பிரான்சின் நான்டஸ் அணிக்காக விளையாடி வந்த இவரை, வேல்ஸ் நாட்டின் கார்டிப்கிளப் அணி அண்மையில் வாங்கியது. கடந்த ஜனவரி 19 அன்று கார்டிப் நகரில் இதற்கான ஒப்பந்தத்தில் எமிலியானோ

## இங்கிலாந்தில் உட... இதயத்துடன் பிறந்த ...

(நாட்டிங்காம்)
இங்கிலாந்தில் பிறந்த குழந்தைக்கு இதயம் உடலுக்கு வெளியே இருந்ததையடுத்து, அறுவைச் சிகிச்சை மற்றும் தொடர் சிகிச்சைக்கு பின் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள நாட்டிங்காம் பகுதியைச் சேர்ந்த டீன் வில்கின்ஸ்-நவோமி ஃபிண்ட்லே தம்பதியருக்கு கடந்த 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி பெண் குழந்தை ஒன்று பிறந்தது.



லெய்செஸ டரில் உள்ள கிளென் ஃபீல்ட் வைத்தியசாலையில் பிறந்த இந்த குழந்தைக்கு வனெ லோப் ஹோப் வில்கின்ஸ் எனப் பெயரிட்டனர். இக் குழந்தை பிறக்கும்போதே நெஞ்செலும்பு இல்லாமலும் இதயம் உடலுக்கு வெளியே இருந்து துடித்தபடியும் காணப்பட்டது.

# வெளிநாடு

## ர் ஜமால் கொலை
## ந்தப்பட்டுள்ளது

### ஐ.நா.அறிக்கை வெளியீடு

நாட்கள் தாமதப்படுத்தியுள்ளன" என்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஜமால் கஷோக்கி கொல்லப்படுவதற்கு முன்னரே சவுதி இளவரசர் முகமது பின் சல்மான், அவரைக் கொல்லத் திட்டமிட்டிருந்ததாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதில் ஜமால் தனது சொந்த நாட்டுக்குத் திரும்பி சவுதி அரசை விமர்சிப்பதை நிறுத்த வேண்டும். இல்லையேல் அவர் மீது புல்லட் பயன்படுத்த இருப்பதாக முகமது பின் சல்மான் கூறியதாக செய்திகள் வெளியாகின.

ஜமால் கஷோக்கி சவுதியின் புகழ்பெற்ற பத்திரிக்கையாளர்.

1980களில் அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனின் வளர்ச்சியிலிருந்து தனது எழுத்துப் பணியைத் தொடங்கியவர்.

அமெரிக்காவின் வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளராக இருந்து சவுதி அரசையும், அதன் மன்னர் மற்றும் இளவரசர்களை விமர்சித்து ஆங்கிலத்திலும், அரபிக் மொழியிலும் கட்டுரை எழுதி வந்தவர்.

இந்த நிலையில் அவர் துருக்கியில் சவுதி தூதரக அலுவலகத்தில் மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலை சம்பவத்தில் சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் சம்பந்தப்பட்டிருப்பதாகக் தெரிவிப்பதால் உலக அளவில் சவுதிக்கு எதிரான அதிர்வலை ஏற்பட்டது.

முதலில் இந்தக் கொலைக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று கூறிய சவுதி பின்னர் சாட்சியங்கள் வலுவாக இருந்ததைத் தொடர்ந்து ஒப்புக்கொண்டது.

ஆனால், இதில் இளவரசர் முகமது பின் சல்மானுக்குத் தொடர்பு இல்லை என்று கூறி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## ரஷ்யாவுடன் சமாதான உடன்படிக்கையை தொடர ஜப்பானின் பிரதமர் அபே விருப்பம்

(டோக்கியோ)

ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே, ரஷ்யாவுடனான சமாதான உடன்படிக்கை பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்கான விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஜப்பானின் வடக்குத் தீவுகளை மீட்பதற்கான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இரண்டாம் உலகப் போரின் இறுதி நாட்களில் ஜப்பானிடம் இருந்து சோவியத் துருப்புக்களால் கைப்பற்றப்பட்ட தீவுகளின் சர்ச்சைக்குரிய தொடர்புகளை நிறுத்திவிட்ட ரஷ்யாவுடன் சமாதான உடன்படிக்கைப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரஷ்யாவின் குரிலேஸ் என அறியப்படும் தீவு, ஜப்பானின் வடக்குப் பிராந்திய எல்லைகள் என அழைக்கப்படும் தீவுகளின் மீதான முறுகல் நிலைமை தொடர்பாக மொஸ்கோவுக்கும் டோக்கியோவுக்கும் இடையில் இதுவரையில் உடன்பாடு எட்டப்படாத நிலையில் சமாதான ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவில்லை.



இந்நிலையில் பிரதமர் அபே, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் எதிர்வரும் ஜூன் மாதம் இடம்பெறும் ஜீ.20 மாநாட்டின் போது இரு தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்தார்.

நேற்று ஜப்பானின் வட பிராந்திய எல்லை தினமாக பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில், இந்தப் பிரச்சினை தொடர்பான தீர்வினை விரைந்து எட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

1945 ஆம் ஆண்டளவில் வடக்குத் தீவுகள் சோவியத் ஒன்றியத்தால் கைப்பற்றப்பட்ட போது அவற்றில் 17,000 ஜப்பானியர்கள் வசித்தனர். தற்போது அங்கு 14,000 ரஷ்யர்களும் குடியேறியுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## ல்பந்து வீரர்
## ம் கண்டெடுப்பு

கையெழுத் திட்டார். பின்னர் பிரான்ஸ் திரும்பிய எமிலியானோ சலா, ஜனவரி 21 மாலை ஒரு தனியார் விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்தார்.

சானல் தீவுகளுக்கு அருகே திடீரென அவரது விமானம் மாயமானது. விமானத்தில் பயணம் செய்த எமிலியானோ மற்றும் பைலட் குறித்து எந்த தகவலும் இல்லாமல் இருந்தது. இதனையடுத்து பொலிஸார் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிறு காலை மாயமான விமானம் விபத்துக்குள்ளானது என கண்டறிந்தனர். இந்த விமானத்தின் இடிபாடுகளில் சிக்கி இருந்த சடலம் திங்கள் அன்று மீட்கப்பட்டது. இதையடுத்து நேற்று முன்தினம் சடலத்தினை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அது எலிமியானோ சலா என்பது உறுதி செய்யப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (4)

### பிரெக்ஸிட் விவகாரம்

## ஐரோப்பிய கூட்டமைப்பு தலைவர் தெரேசா மே பேச்சுவார்த்தை

(லண்டன்)

'பிரெக்ஸிட்' விவகாரம் தொடர்பாக இங்கிலாந்து பிரதமர் தெரேசா மே ஐரோப்பிய கூட்டமைப்பு தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து அரசு வெளியேறுவது தொடர்பாக கடந்த 2016 ஆம் ஆண்டு பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அந்த நாட்டு மக்களில் பெரும்பான்மையானோர் இதற்கு ஆதரவு அளித்தனர்.

முறைப்படி ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறும் 'பிரெக்ஸிட்' நடவடிக்கைகளை பிரதமர் தெரசா மே தீவிரப்படுத்தினார்.

ஆனால் இதனை வெற்றிகரமாக நடத்தி முடிப்பது தெரசா மேவுக்கு சவாலாக உள்ளது.

ஏனெனில் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவது உறுதி செய்யப்பட்டபோதிலும் எப்படி எந்த மாதிரியான முன்னேற்பாடுகளுடன் இது நிகழ வேண்டும் என்பதில்தான் சிக்கல் உள்ளது.

அதாவது ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய பின்னர் பொருளாதாரம், வெளியுறவு கொள்கை என எந்த வகையிலும் இங்கிலாந்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சிறப்பான ஒப்பந்தத்தின் மூலம் 'பிரெக்ஸிட்' நிகழ்ந்தாக வேண்டும்.

இதற்காக தெரசா மே ஐரோப்பிய கூட்டமைப்பிடம் தொடர் பேச்சுவார்த்தை நடத்தி, ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி அதற்கு ஒப்புதலையும் பெற்றார்.

ஆனால் அந்த ஒப்பந்தம் இங்கிலாந்துக்கு பாதகமானது எனக் கூறி எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாது தெரசா மேயின் சொந்தக் கட்சியான கன்சர்வேடிவ் கட்சியினரும் போர்க்கொடி உயர்த்தினர்.

இதனால் அந்த ஒப்பந்தம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டது. இது தெரசா மேவுக்கு தலைவலியாக அமைந்தது. இதையடுத்து எந்தவித ஒப்பந்தமும் இல்லாமல் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறலாம் என தெரசா மே வலியுறுத்தினார். ஆனால் அதற்கும் எதிர்ப்பு தெரிவித்த எம்.பிக்கள் தெரசா மேவின் முடிவை நிராகரித்தனர்.

மாறாக 'பிரெக்ஸிட்' விவகாரம் தொடர்பாக ஐரோப்பிய கூட்டமைப்பிடம் மறு பேச்சுவார்த்தை நடத்தி புதிய ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தும்படி எம்.பிக்கள் தெரசா மேவை வலியுறுத்தினர்.

இந்த நிலையில், 'பிரெக்ஸிட்' தொடர்பான பேச்சுவார்த்தைக்காக தெரசா மே நேற்று முன்தினம் பெல்ஜியம் சென்றார். அங்கு அவர் தலைநகர் பிரசல்சில் ஐரோப்பிய கூட்டமைப்பின் தலைவர் டொனால்ட் டஸ்க் மற்றும் ஐரோப்பிய ஆணைக் குழுவின் தலைவர் ஜீன் கிளாட் ஆகியோரை சந்தித்து பேசவுள்ளார். (4-7)

## உடலுக்கு வெளியே
## ந்த அதிசய குழந்தை



இதையடுத்து குழந்தைக்கு 3 அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, தொடர் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டது. பின்னர் வீட்டிற்கு அருகில் உள்ள குயின்ஸ் மருத்துவமையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வாறு 14 மாத தொடர் பராமரிப்புக்கு பிறகு குழந்தையின் உடல்நிலை தேறியதையடுத்து, குழந்தை நேற்று இரவு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டது. குழந்தை குணமடைந்ததால் பெற்றோர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது மிகவும் அற்புதமான தினம் என்றும் குழந்தையை வீட்டிற்கு அழைத்து வந்தது அளவு கடந்த மகிழ்ச்சியை அளிப்பதாகவும் குழந்தையின் தாய் நவோமி ஃபிண்ட்லே நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார். (4)

## விசா மோசடி விவகாரம்;இந்திய மாணவர்களுக்கு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் விசா மோசடியில் கைதான இந்திய மாணவர்களுக்கு ஆதரவாக அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்துள்ளனர்.

இந்திய மாணவர்கள் சரியாக நடத்தப்பட வேண்டுமென்பதுடன் தூதரக தொடர்பினைப் பெற அனுமதிக்க வேண்டும் என்றும் இந்திய வம்சாவளியான அமெரிக்க அமைச்சரான ராஜா கிருஷ்ணமூர்த்தி தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்திய மாணவர்களின் விடுதலை குறித்து, உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இக்கடிதத்தில் தாமஸ் சூஸ்ஸி, ராப் உட்டால், பிரெண்டா லாறன்ஸ் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க கல்வி நிலையங்களில் கல்வி கற்பதாகக் கூறி, அதிகளவான வெளிநாட்டு மாணவர்கள் போலி கடவுச்சீட்டில் தங்கியிருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்நிலையில் அவர்களைக் கண்டறியும் பொருட்டு குழுவொன்றை டொனால்ட் ட்ரம்ப் உருவாக்கினார்.

அதற்காக மிச்சிகன் மாகாணத்தில் ஃபார்மிங்டன் பல்கலைக்கழகம் என்ற பெயரில் போலியான கல்வி நிறுவனத்தை அமெரிக்க அரசாங்கம் உருவாக்கியது.

அதில் அதிகளவான வெளிநாட்டு மாணவர்கள் பதிவுகளைச் செய்துள்ளனர்.

அந்தவகையில் அண்மையில் குடிவரவு, சுங்க அமுலாக்கப்பிரிவு திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது, 130 பேர் போலி கடவுச்சீட்டில் வருகை தந்தமை கண்டறியப்பட்டு கைது செய்யப்பட்டனர். அவர்களில் 129 பேர் இந்தியரென அறிவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் அவர்களை விடுவிக்குமாறு இந்தியா தொடர்ச்சியாக கோரி வருகின்ற நிலையில், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## பாதாள உலகக் குழுத் தலைவன்

# மதூஷை விடுதலை செய்ய 12 சட்டத்தரணிகள் முயற்சி

(டுபாய்)

டுபாயைச் சேர்ந்த 12 சட்டத்தரணிகள், பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் மாகந்துரே மதூஷை விடுதலை செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.

சட்டத்தரணிகளின் உதவியுடன் தப்பித்துக் கொள்ளும் நோக்கில் பல கோடி ரூபாய் பணத்தை மதூஷ் தரப்பினர் செலவிட்டுள்ளதாகவும் இந்தியா உள்ளிட்ட சில நாடுகளின் சட்டத்தரணிகள் இவ்வாறு மதூஷை விடுதலை செய்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

மதூஷின் இரண்டாவது மனைவி மற்றும் டுபாயில் உள்ள பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இவ்வாறு விடுதலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள னர்.

இதேவேளை, டுபாய் பொலிஸாரால் சந்தேக நபர்களை அடையாளம் காணும் நோக்கில் உளவாளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட புகைப்படங்கள் இலங்கை ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டமை குறித்து டுபாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# கடற்படைத் தளபதி-சபாநாயகர் சந்திப்பு





(கொழும்பு)

இலங்கைக் கடற்படையின் தளபதி வைஸ் அட்மிரல் பியல் த சில்வா நேற்று முன்தினம் சபாநாயகர் கரு ஜெயசூரியவைப் பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தில் வைத்து சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடற்படைத்தளபதியாக கடமையேற்றபின் சபாநாயகருடன் மேற்கொண்டுள்ள முதல் உத்தியோகபூர்வ சந்திப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

புதிய கடற்படைத் தளபதிக்கு சபாநாயகர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த பின் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

மேலும் இந் நிகழ்வை நினைவுகூரும் வகையில் இவர்களிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (இ-4)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 4 ஆயிரம் ரூபாய் சம்பளம்

(ஏறாவூர்)

முன்பள்ளி ஆசிரியர்களின் மாதாந்த சம்பளத்தை 4 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தி வழங்க கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்து தொடர்பான கூட்டம் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களாக சுமார் 4 ஆயிரத்து 500 பேர் கிழக்கு மாகாண சபையினுடைய பாலர் பாடசாலை முன்பள்ளி பணியகம், கல்வி அமைச்சின் நியமனத்துடன் கடமையாற்றி வருகின்றனர்.

இவ் ஆசிரியர்களுக்கு கடந்த 8 வருடங்களுக்கு மேலாக 3 ஆயிரம் ரூபாய் மாதாந்தச் சம்பளமாக வழங்கப்பட்டு வருகிறது.

இச்சம்பளம் தமக்கு போதாமை தொடர்பாக முன்பள்ளி ஆசிரியர்கள் ஆளுநருக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக திறைசேரி கல்வி திறைசேரி திட்டமிடல் திணைக்களம் போன்றவற்றுடன் கலந்துறையாடியதன் பின்னர் அனைவரினதும் இணக்கத்துடன் மாதாந்தச் சம்பளத்தை 3 ஆயிரம் ரூபாய் முதல் 4 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தி வழங்க கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கிழக்கு மாகாண பாலர் பாடசாலை முன்பள்ளி பணியகத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-4)

# பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி பதிவாளர்கள் உட்பட நால்வருக்கு இடமாற்றம்




(பத்தனை)

பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரில் முறைகேடாக நடந்து கொண்ட பதிவாளர்கள் உட்பட நான்கு பேருக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வியியற் கல்லூரிகளின் ஆணையாளர் எம்.என்.ஏ. பண்டாரவால் குறித்த நான்கு பேருக்குமான இடமாற்றத்திற்கான கடிதம் பத்தனை தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தொலைநகல் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்லூரியின் பீடாதிபதி தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த நான்கு பேருக்கும் எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வந்த ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டுள்ள நிலையில் குறித்த பதிவாளர்களுக்கு பதிலாக தற்காலிகமாக வேறு பதிவாளர்கள் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பழிக்குப்பழி

பழிக்குப்பழி! இரத்தத்திற்கு இரத்தம்! நமக்கு எல்லாம் மிகவும் பழக்கப்பட்டுப் போன வார்த்தைகள். காலம் அப்படி ஆகிவிட்டது! உயிருக்கு விலை மிகவும் குறைந்து போய்விட்டது !

மிருகம் எல்லாம் கூட ஒன்றோடு ஒன்று துப்பாக்கியினால் சுட்டுக் கொள்வது இல்லை! ஆனால் மனிதன்,

ஒருத்தரை ஒருத்தர் சுட்டுக் கொள்கின்றான்! குத்திக் கொள்கின்றான்!

ஒரு மிருகத்திடம் இருந்து மனிதனை காப்பாற்றுகின்றது சுலபம்! ஆனால்...

மனிதனிடம் இருந்து மனிதனைக் காப்பாற்றுவதற்கு கஷ்டம்! எந்த நேரத்தில் என்ன செய்வான் என்று சொல்ல முடியாது! பிறக்கும் போது நன்றாக இருக்கின்ற மனிதன் போகப்போக ஏன் இப்படி ஆகிவிடுகின்றான்! பொறுப்பாகக்கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கலாமா?

வளரும் முறை... வளர்க்கும் முறை இது எல்லாம் தான் இதுக்குக் காரணமாக இருக்கும் போல இருக்கு!

கொஞ்ச நாளைக்கு முன்னால் ஒரு பாடப்புத்தகம் பார்த்தேன்!

முதல் வகுப்புக்கான புத்தகம் என்று நினைக்கின்றேன்! அதிலே ஒரு இடத்தைப் பார்த்ததும் எனக்கு வியப்பாய் என்கிறது! ஏன் தெரியுமா?

அதிலே வண்ணங்களைப் பற்றி– அதாவது கலர்களைப் பற்றி சொல்லிக் கொடுக்கின்ற பாடம்.

இலையின் நிறம் பச்சை என்று எழுதியிருந்தது!

பக்கத்திலே பச்சை நிறத்தில் இலையுடைய படம் போட்டிருந்தார்கள் தெரியுமா?

ஒரு கை விரல். அதை ஒரு கத்தி அறுக்கின்றது! அதில் இருந்து சிவப்பாக இரத்தம் சொட்டுகின்றது! இதுதான் அந்தப்படம்! சிவப்பு நிறம் எப்படி இருக்கும் என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். இந்த விதமாகக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! பிஞ்சு மனதில் எப்படி நஞ்சை தூவுகின்றோம் பார்த்தீர்களா?

அந்தப் படத்தை பார்க்கிற சின்னப் பிள்ளைகள் சிவப்புக் கலர் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்வதைவிட சிவப்புக் கலரைப் பார்க்க வேண்டும் என்றால் கத்தியாலே விரலை வெட்டலாம் என்றுதான் அதிகமாகத் தெரிந்து கொள்ளும்!

அப்புறம் ஏன் அவன் பெரிய பிள்ளையாகப் போனவுடனே கத்தியைத் தூக்க மாட்டான்?

இன்னமும் நாங்கள் என்ன செய்கின்றோம் தெரியுமா? எங்களுடைய பிள்ளைகளுக்கு விளையாட்டுத் துப்பாக்கியை வாங்கிக் கொடுத்து வேடிக்கை பாக்கின்றோம்!

"சுடுடா கண்ணா " என்று சொல்லிக் கொடுக்கின்றோம்!

தீபாவளி வந்துவிட்டால் எத்தனை குழந்தைகள் துப்பாக்கியும் கையுமாக அலைகின்றார்கள்!

இவன் ஏன் பெரியவனா ஆனவுடனே தைரியமாக துப்பாக்கியைத் தூக்க மாட்டான்?

சின்னப் பிள்ளைகளுக்கு வீரத்தை ஊட்டுவது தப்பில்லை! வெறியை ஊட்டுவது தான் தவறு! விளையாடுவதற்காக குழந்தைகளுக்கு பொம்மைகள் வாங்கினால் கூட கொஞ்சம் விபரத்தோட வாங்கிக் கொடுக்க வேண்டியது பெரியவர்கள் பொறுப்பு!

சின்ன வயதிலேயே நல்லதை சொல்லி வளர்த்தால் நாளைக்கு அவர்கள் நல்ல படியா இருப்பார்கள்!

எங்கள் ஊர் பக்கத்திலே ஒரு பெரியவர் இருந்தார். வள்ளலார் பக்தர் அவர்.

அவர் எப்படி என்றால் கொலை என்கின்ற வார்த்தையைக் கூட தன் வாயாலே உச்சரிக்க மாட்டார். ஒரு தடவை ஏதோ ஒரு ஊரிலே நடந்த கொலையைப் பற்றி பேப்பரில் படித்துவிட்டு அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது அவர் சொன்னார்.

" தம்பி... எங்கள் ஊர் பக்கத்திலே கூட நீ இப்ப சொல்லிக் கொண்டு இருந்தியே அது நடந்திடும் போல இருந்தது! "என்றார்...

இது மாதிரி அவர் அந்த வார்த்தையை உச்சரிக்கிறபோதே பாவம் என்று நினைத்தார்.

இப்படிப்பட்டவர்களும் அங்கங்கே இருக்கத்தான் செய்கிறார்கள்!

இந்தக் காலத்து பையன் கிட்ட போய் டேய் தம்பி! ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்ட வேண்டும் என்று சொன்னால்...

" போங்க சேர்! இன்னொரு கன்னத்திலேயும் நான் அடி வாங்கிறதிலே உங்களுக்கு ஏன் அவ்வளவு ஆசை! " என்கிறான்.

பெரியவர்கள் எல்லாம் எதுக்காக அப்படிச் சொல்லி வைத்தார்கள் என்று கூட புரிந்து கொள்ள முடியாத அளவுக்குப் போய்விட்டோம்!

"நாலடியார் இருக்கே..."அதிலேயே ஒரு பாட்டு!

பெரியவங்களைப் பார்த்த சின்னவங்க ஏதாவது தப்பா பேசிவிட்டால் கூட அதுக்காக அவர்க் திருப்பித் தப்பாக பேசிவிடமாட்டார்களாம். கீழ் மக்களுக்கு எதிரா மேன் மக்கள் ஒருபோதும் தாழ்வான சொற்களை பேச மாட்டார்கள் என்று அது சொல்கிறது.ஒரு நாய் எங்களை கடித்துவிடுகின்றது.அதுக்காக பதிலுக்கு அந்த நாயை கடிக்கிற மனிதர்கள் உண்டா?

அப்படி என்று கேட்கின்றது அந்தப் பாட்டு.

"கவ்ந்து நாய் கௌவிக் கொளக்கண்டும் தம் வ்ாயால்
பேர்த்து நாய் கௌவினார் ஈங்கில்லை–நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம் வாயால் மீட்டு"

இது தான் அந்த நாலடியார்.அதனாலே பழிக்குப்பழி இரத்தத்திற்கு இரத்தம் இது எல்லாம் நமக்கு வேண்டாம்! நாளைய தலைமுறைக்கும் வேண்டாம்! ஒருத்தர் கேட்டாராம்! அதோ அந்த ஆளு என்ன செய்து கொண்டிருக்கின்றார் என்று.

அதுக்கு இன்னொருத்தர் ஒன்றுமில்லை! செருப்பு அவர் காலை கடித்து விட்டதாம். அதனாலே பழிக்குப்பழி வாங்குகின்றேன் என்று சொல்லிக் கொண்டு இவர் அதை திரும்பிக் கடித்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார்!

இந்தக் காலத்திலே இப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!



# இலங்கைத்தீவு தமிழர் தேசம் சிங்களவர்கள் வந்தேறுகுடிகள்

## பிக்குவிற்கு பதிலடி கொடுத்த விக்கிரமபாகு

(கொழும்பு)

இலங்கைத்தீவு தமிழர் தேசம் என்பதை உரிய ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டுவேன். வரலாறு தெரிந்தால் முதுகெலும்பிருந்தால் எல்லாவல மேதானந்த தேரர் தன்னுடன் பகிரங்க விவாதமொன்றுக்கு வரவேண்டும் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன சவால் விடுத்துள்ளார். சிங்களவர்கள்தான் வந்தேறுகுடிகள் என்பதையும், வடக்கு தமிழர்களின் பூர்வீகம் என்ற யதார்த்தபூர்வமான உண்மையையும் தேரருக்குக் கற்பிப்பதற்கு நான் தயாராகவே உள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

வந்தேறுகுடிகளான தமிழ்மக்கள் எப்படி வடக்கிற்கு உரிமை கோருவது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் காரசாரமான முறையில் கருத்துத் தெரிவித்துள்ளமை தொடர்பில் விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லாவல மேதானந்த தேரர் ஒரு கல்விமானாக இருந்துகொண்டும், வரலாறு தெரிந்தும் சிங்கள மக்களைக் குஷிப்படுத்துவதற்கு போலிக் கதைகளைக் கட்ட விழ்த்துவிட்டு இதுதான் வரலாறு, இதிகாசம் என்றும் சுட்டிக் காட்டுகின்றார்.

இலங்கைத்தீவு தமிழர் தேசமாகும். விஜய மன்னன் இங்கு வந்த பின்னர்தான் பௌத்த மதம் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அதற்கு முன்னர் இலங்கையைத் தமிழ் மன்னர்கள்தான் ஆட்சி செய்தனர். இராவணன், குவேனி என வரலாற்றுப் பட்டியலை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

இந்தியாவில் இருந்து வந்தவர்கள்தான் சிங்களவர்கள். பாகு என்ற பெயர் பங்களாதேஷத்துக்குரியது. பராக்கிரமபாகு, விக்கிரமபாகு என சிங்களவர்களுக்குப் பெயர்கள் இருக்கின்றன. இது இந்தியாவில் இருந்து வந்தவர்கள்தான் சிங்களவர்கள் என்பதைப் பறைசாற்றுகின்றது.

அத்துடன், இலங்கைத் தமிழர்களின் பூர்வீகம்தான் என்பதை உறுதிப்படுத்துவதற்கு மேலும் பல ஆதாரங்கள் உள்ளன. விஜய மன்னன் இங்கு வந்துதான் தமிழர்களின் பிரதேசங்களை ஆக்கிரமித்துக்கொண்டார்.

பௌத்த மதம் கூட இந்தியாவில் இருந்துதான் வந்தது. எனவே, வடக்கு மட்டுமல்ல, இலங்கையின் பூர்வீகம் தமிழ்தான் என்பது தெளிவாகத் தென்படுகின்றது.

மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் இந்தியாவில் இருந்து வந்திருந்தாலும் அவர்கள் நூறு, இருநூறுக்கும் மேற்பட்ட வருடங்கள் இங்குதான் வாழ்கின்றனர் என்பதை அரசு புரிந்து கொள்ளவேண்டும்.

வடக்கு தமிழர் பிரதேசம் அல்ல என்றும், தமிழர்கள் வந்தேறுகுடிகள் என்றும் இனவாதம் பேசித்திரியும் எல்லாவல மேதானந்த தேரர் இது விடயம் தொடர்பில் விவாதம் நடத்துவதற்குத் தயாரா? அவர் பகிரங்க விவாதத்துக்கு வரவேண்டும் என நான் சவால் விடுக்கிறேன் என நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை, கல்கிஸை மாநகரசபை உறுபினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்தார். (இ-4)

# இக்கட்டான நிலைக்கு பொதுஜன பெரமுன முகங்கொடுக்காது

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு



(பத்தரமுல்ல)

மூத்த கட்சிகள் போன்று இக்கட்டான நிலைக்கு பொதுஜன பெரமுன முகங்கொடுக்காது என அக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இக்கட்டான தருணங்களை எதிர்கொள்வதை தவிர்த்துக் கொள்வதற்காக கட்சியின் சேமிப்பில் 21 மில்லியன் ரூபாய் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள கட்சி அலுவலகத்தில் உறுப்பினர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியத் கட்சி எதிர்க்கட்சியாகத் தொழிற்பட்ட காலத்தில் கட்சித் தலைமை அலுவலகமான சிறிகொத்தவின் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது.

அதேபோன்று ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்த காலப்பகுதியில் நிதி குறைப்பாடு காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகம் மூடப்பட்டது எனவும் பசில் சுட்டிக்காட்டினார்.

ஆனால், இவ்வாறான நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளும் கட்சி உறுப்பினர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

அவர்களின் இப்பங்களிப்புக்குத் தான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதாகவும் பசில் தெரிவித்தார். (இ)



யாழ். கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் க.ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் கடந்த 31 ஆம் திகதி நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுவுநர் கணேஸ்வரன் வேலாயுதம் கலந்து சிறப்பித்தார். (படங்கள்-மகாலிங்கம்)

# நாய்களுக்கான கருத்தடைக்கு மேலதிக கட்டணம் அறவிட முடியாது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் 9 ஆயிரம் நாய்களுக்கு இலவசக் கருத்தடை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கால்நடை உற்பத்திப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.வாகீசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண த்தில் கட்டாக்காலி நாய்களால் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதாகவே தெரிவித்தார்.

இத் திட்டத்தின் மூலம் கட்டாக்காலி நாய்களினால் ஏற்படுகின்ற விபத்துக்கள் குறைவடைந்துள்ளதாகவும் இவ்வருடமும் பிரதேச ரீதியாக நாய்களுக்கான கருத்தடையை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளில் பிராந்திய கால்நடை உற்பத்திச் சேவை நிலையங்கள் இயங்குவதாகவும் அவற்றின் ஊடாகக் கருத்தடை மேற்கொள்வதற்காக எவ்வித சிகிச்சைக் கட்டணமும் செலுத்தத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் அரசாங்கச் சேவைக் கட்டணமாக ஊர் இன நாய்களுக்கு 20 ரூபாவும் உயர் இன நாய்களுக்கு 50 ரூபாவும் அறவிடப்படுவதாகவும் மேலதிகமாக எவ்வித கட்ட்ணங்களும் வழங்கத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு உணவகங்களுக்குச் சீல்

## 65 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த இரு உணவகங்கள் மீது நேற்று முன்தினம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் யாழ்.சிறுவர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகா ாரப் பரிசோதகர்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே குறித்த உணவகங்கள் சுகாதாரச் சீர் கேட்டுடன் இயங்கி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. குறித்த உணவகங்கள் மீது உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் 65 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் சுகாதாரப் பரிசோதகர்களின் அறிக்கை கிடைத்த பின்னரே குறித்த உணவகங்களைத் திறக்க முடியுமென நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது. (இ-10-272)

# மூக்குக் கண்ணாடி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க சனசமூக நிலையத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டமும் மூக்குக் கண்ணாடி வழங்கலும் நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சனசமூக நிலைய மேல் தளத்தில் நடைபெறும். இதில் நுழைவாயில் லயன் கழக ஏற்பாட்டில் 150 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும். (இ-5-102)

# கைதடியில் சட்டவிரோத மதுபான உற்பத்தி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி மத்தியில் சட்டவிரோத மதுபான விற்பனை அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த பகுதியில் கடந்த 3 வருடத்திற்கு மேலாக சட்டவிரோத மதுபான விற்பனை இடம்பெற்று வருவதாகவும் இதனால் கலாசாரச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

போயா தினங்களில் மதுபானசாலைகள் மூடப்படும் நிலையில் அதிகளவான சட்டவிரோத மதுபானங்கள் குறித்த பகுதியில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவித்தனர்.

எனவே குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-111)

# இழப்பீடு கிடைக்காத வடக்கு மக்கள் உடன் மேன்முறையீடு செய்யலாம்



## விவசாய அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**இழப்பீடு கிடைக்கப்பெறாத வெள்ளப்பாதிப்பிற்குள்ளான வடக்கு மாகாண மக்கள் உடனடியாக மேன்முறையீடு செய்யலாம் என விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.**

வெள்ளத்தினாலும், சேனா படைப்புழுக்களினாலும் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு அரசின் நிவாரணம் குறித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே விவசாய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றி அவர், "வடக்கில் 50 ஆயிரம் காணிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அது தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி இழப்பீடு தொகை வழங்கும் நடவடிக்கை வடக்கிலுள்ள சகல மாவட்ட செயலகங்களிலும் முன்னெடுக்கப்படுகிறது. யாருக்காவது இழப்பீடு கிடைக்கவில்லை என்றால் மேன்முறையீடு செய்ய முடியும்.

பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு கொடுப்பனவு செலுத்தப்பட்டு வருகிறது. நிலக்கடலை பாதிப்பு குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அது குறித்த மதிப்பீடு கிடைக்கப் பெறவுடன் நடவடிக்கை எடுப்போம்.

ஆனால், போலியான தேவையற்ற விதத்தில் சிலரால் இழப்பீடு கோரப்பட்டுள்ளது. எனவே, மாவட்ட செயலாளர்களின் மதிப்பீடுகள் முன்வைக்கப்பட்டவுடன் அனைவருக்கும் இழப்பீடு வழங்க தயார்.

இதேவேளை, படைப் புழு பாதிப்பிற்கு உள்ளானவர்களுக்கு 40 ஆயிரம் ரூபாய் வரை நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்" எனத் தெரிவித்தார். (இ-4)

# சைவத்திருமுறைப் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் இளந்தொண்டர் சபையில் இயங்கிவரும் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த-சைவத் திருமுறைப் பயிற்சி நெறிகளின் புதிய அணிகள் 2019.03. 02 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

திருவாவடுதுறை ஆதீனத்தின் "சித்தாந்தரத்தினம்" பட்டத்திற்குரிய நேர்முகப் பயிற்சியும் "திருமுறை நெறிச் செல்வர்" பட்டத்திற்குரிய நேர்முகப் பயிற்சியும் ஓராண்டு பாடத்திட்டத்தில் நடைபெறும்.

மாதந்தோறும் முதலாம் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநேரமாக நடைபெறும் இந்த நேர்முகப் பயிற்சியைப் பெறவிரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

இப் பயிற்சி நெறிகள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெறுகின்றன.

விண்ணப்பத்தை திருநாவுக்கரசு, இணைப்பாளர், சைவசித்தாந்தப் பயிற்சி மையம், வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு எனும் முகவரிக்கு அனுப்பலாம்.

அல்லது 021 224 1446, 077 371 3864 எனும் தொலைபேசி இலக்கங்களூடாகவும் பெயர்களைப் பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அமரர் சத்தியமூர்த்தியின் நினைவுகளுடன் பேசுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவு மகா வித்தியாலய பழைய மாணவன் அமரர். புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் நினைவுகளுடன் பேசுதல் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4 மணியவில் மண்டைதீவு மகா வித்தியாலய கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது. (இ-5)

# சுதந்திரக்கட்சி-மகிந்த அணியுடன் இணைந்து பயணிப்பது உறுதி

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து பயணிப்பது என்பது உறுதி எனவும், ஒரு பெயரிலும் பொதுவான ஒரு சின்னத்திலும் கூட்டணி அமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெறுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் பொதுஜன பெரமுனவால் நியமிக்கப்பட்டுள்ள 8 பேருடன் இணைந்து கலந்து கொள்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் தயாசிறி ஜெயசேகர, திலங்க சுமதிபால மற்றும் அதாவுல்லா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான அதிரடிப்படையின் துணிச்சல் மிக்க செயலை பெரிதும் பாராட்டுகின்றேன்

## லத்தீபுக்கு ரணில் கடிதம்



(கொழும்பு)

போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களை முறியடிப்பதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைப் பாராட்டி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் பொலிஸ் விசேட அதிரடிப்படை கட்டளையிடும் அதிகாரியும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான எம்.ஆர். லத்தீபுக்கு விசேட கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், போதைப் பொருள் அச்சுறுத்தல் மற்றும் போதைப் பொருள் குற்றச் செயல்களை நாட்டிலிருந்து துடைத்தெறிவதற்கு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கைது செய்வதில் அண்மைக்காலமாக எஸ்.ரி.எப். படைப் பிரிவு முன்னெடுக்கும் வெற்றிகள் பாராட்டுக்குரியது எனவும் அவர் தெரிவித்தார்.

விசேட அதிரடிப்படையின் துணிச்சல் மிக்க செயலைப் பாராட்டுகின்றேன். இப்படியான தைரியம் மிக்க பொலிஸ் அதிகாரிகள் இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு கிடைத்துள்ள மிகப் பெரும் சொத்தாகும்.

அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்ட பாரிய போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக பாடுபட்ட பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-4)

# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். காரைநகர் மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.33 மணிமுதல் காலை 7.49 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும். (இ-5)

# அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் கடற்படைத் தளபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

ஐக்கிய அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கர்னல் டக்ளஸ் சி. ஹீஸ் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் த சில்வாவை நேற்று முன்தினம் கடற்படை தலைமையகத்தில் சந்தித்தார்.

இச் சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (இ-4)

# தேங்கியுள்ள சகல கொள்கலன்களும் ஒரு வாரத்தில் வெளியேற்றப்படும்

## சுங்கப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

துறைமுகத்தில் தேங்கியுள்ள சகல கொள்கலன்களையும் ஒரு வார காலப்பகுதியினுள் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என சுங்கப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுவரை ஒரு நுழைவாயில் வழியாகவே கொள்கலன்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில் மாற்று நடவடிக்கை ஒன்றை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுங்கப் பணியாளர்களின் போராட்டம் காரணமாக துறைமுகத்தில் கொள்கலன்களை விடுவிக்கும் பணிகள் முடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முதியோர் இல்லப் பொறுப்புக்கள் திணைக்களப் பணிப்பாளரிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் ஓய்வுபெற்று சென்றுள்ள நிலையில் புதிய அத்தியட்சகரை நியமிக்கும் வரை முதியோர் இல்லம் பொறுப்புக்களை வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரட்ணம் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த 29 வருடங்களாக முதியோர் இல்லத்தில் அத்தியட்சகராகவிருந்து சேவையாற்றிய ஓய்வுபெற்ற த.கிருபாகரனுக்கு முதியோர் இல்ல நலன்புரிச்சங்கத்தினர் பாராட்டு விழாவும் பிரியாவிடையும் நடத்தினர். (இ-5-272)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

166



யாழ்ப்பாணக் கச்சேரி இருந்த பழைய கட்டடம். இங்கேதான் நாவலர் வந்து அச்சுக்கூடம் நிறுவுவதற்கு அரசாங்க அதிபரான டைக் துரையிடம் அனுமதி பெற்றார்

இவை இரண்டு நிறுவனங்களும் வண்ணார்பண்ணையில் அமைந்தன. ஜூலை 1849இல் நாவலரும் அவரது மாணவரும் சக மாணவருமாக இருந்த சதாசிவம்பிள்ளையும் சென்னைக்கு அச்சியந்திரமொன்றை வாங்குவதற்கு சென்றனர்.

மானிப்பாயிலிருந்த அமெரிக்கன் மிஷனரியின் அச்சுக் கூடத்தை தவிர இந்த வசதி இங்கு முன்பிருக்கவில்லை. நாவலர் யாழ்ப்பாணம் திரும்பி அச்சுக்கூடத்தை நிறுவி அதற்கு வித்தியா அனுபாலன இயந்திரசாலை என பெயரிட்டார்.

ஆரம்பத்தில் நாவலர் சில வருடங்களாக நிகழ்த்திய பல பிரசங்கங்களையும் நூல்களையும் இவ் அச்சகம் வெளியிட்டது. பின்னர் நாவலர் சைவசயமய நூல்களையும் தமிழிலக்கியங்களையும் மட்டுமல்லாமல் கிறிஸ்தவ எதிர்ப்பு பிரசுரங்களையும் வெளியிடுவதற்கும் இந்த அச்சுக் கூடத்தை பயன்படுத்தினார்.

சைவத் தமிழ்ப் பாடசாலைகளில் சைவசமயத்தையும் அதன் கோட்பாடுகள், பாரம்பரியங்கள் என்பவற்றையும் கற்பித்தல், கோவில்களிலும் பொதுமேடைகளிலும் பிரசங்கங்களையும் உரைகளையும் ஆற்றுதல், கிறிஸ்தவ மதத்திற்கும் மிஷனரிமாருக்கும் எதிரான சிறு நூல்களையும் துண்டுப்பிரசுரங்களையும் வெளியிடுதல் என்பவை சைவ சமயத்தையும் அதன் பாரம்பரியங்களையும் பாதுகாப்பதற்கு நாவலரினாலும் அவரைப் பின்பற்றியவர்களினாலும் பயன்படுத்தப்பட்ட முக்கிய கருவிகளாக இருந்தன.

தமிழர் மத்தியிலிருந்து கிறிஸ்தவத்தைக் களைந்தால் சைவம் பாதுகாக்கப்படும் என்பது நாவலரின் கருத்தாக இருந்தது. எனவே கிறிஸ்தவத்தைத் தாக்குவதற்கு நாவலர் இரு பெரும் தந்திரோபாயங்களைக் கையாண்டார்.

இவற்றில் முதலாவது கிறிஸ்தவ மிஷனரிமாருடன் விவாதங்களில் ஈடுபடுவது, இரண்டாவது மதப்பிரசாரங்களை வெளியிடு ஆகும்.

பிரசங்கிப்பது, உரையாற்றுவது என்பவற்றை நாவலர் 1872 இல் ஆரம்பித்துப் பல வருடங்களுக்கு அவற்றைத் தொடர்ந்து செய்தார். அவருடைய சகபாடிகளும் மாணவர்களும் அவரை அடியொற்றி மக்களுக்குச் சைவ சமயக் கோட்பாடுகள், அதன் பாரம்பரியங் கள் என்பவற்றைக் கற்பித்த துடன் கிறிஸ்தவத் தாக்குதல் களுக்கு எதிராகச் சைவத்தைப் பாதுகாத்தனர்.

> “மானிப்பாயிலிருந்த அமெரிக்கன் மிஷனரியின் அச்சுக் கூடத்தை தவிர இந்த வசதி இங்கு முன்பிருக்கவில்லை. நாவலர் யாழ்ப்பாணம் திரும்பி அச்சுக்கூடத்தை நிறுவி அதற்கு வித்தியா அனுபாலன இயந்திரசாலை என பெயரிட்டார். ஆரம்பத்தில் நாவலர் சில வருடங்களாக நிகழ்த்திய பல பிரசங்கங்களையும் நூல்களையும் இவ் அச்சகம் வெளியிட்டது”

### தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

நாவலரின் இந்த நடவடிக்கைகளுக்கு அவரது இரு சகாக்களான வெங்கடாசலஐயரும் குமாரகார்த்திகேய ஐயரும் உறுதுணையாக இருந்தனர். இவர்களைப் போன்றே சதாசிவம் பிள்ளையும் தில்லைநாதப் பிள்ளையும் அமைப்பாளர், இணைப்பாளர் என்ற வகையில் உதவினர்.

பொதுமக்களும் கணிசமான ஆதரவையும் உற்சாகத்தையும் அளித்த போதிலும் நாவலர் இவை போதுமெனக் கருதி வாழாதிருக்கவில்லை. அவர் எதிர்காலத்திற்கான திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்தார் என்பது பின்வரும் கூற்றில் இருந்து தெரிகின்றது.

தமிழ்க் கல்வியும் சைவமும் அபிவிருத்தியாவதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலைகள் ஸ்தாபித்தும் சைவப் பிரசாரங்களைச் செய்வித்தலுமேயாகும்.

இவற்றின் பொருட்டு . கிரமமாகக் கற்றுவல்ல உபாத்தியாயர்களும் சைவப் பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினாலோ நல்லொழுக்கம், விவேகம், கல்வியில் விருப்பமும் இடையறா முயற்சியும் ஆரோக்கியமும் உடையவர்களில் பரீட்சிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து அன்னம், வஸ்திரம் முதலியவை கொடுத்து உயர்வாகிய இலக்கண விளக்கங்களையும் சைவ சாஸ்திரங்களையும் கற்பித்தல் வேண்டும்.

அவர்களுள் தேர்ச்சியடைந்தவர்களை உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகராகவும் நியமிக்கலாம்.

சைவத்தையும் தமிழ்மொழியையும் நீண்டகாலத்திற்குப் பாதுகாக்கவும் விருத்தி செய்யவும் இளைய சந்ததியினருக்குக் கல்வி புகட்டப்படல் வேண்டுமென நாவலர் அறைகூவல் விடுத்தார்.

இருந்தபோதிலும் சில வருடங்களின் பின்னர் தனது இறுதி உரையில் சைவத்தின் எதிர்காலத்தையிட்டு அவரது அச்சத்தை வெளியிடுகின்றார்.

நான் உங்களிடத்தில் கைமாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது முப்பத்திரெண்டு வருடகாலம் உங்களுக்கு சைவ சமயத்துண்மைகளைப் போதித் துள்ளேன். எனக்குப் பின் சைவசமயம் குன்றிப்போமென்று பாதிரிமார் சொல்கின்றார்கள்.

ஆதலால் நான் உயிரோடிருக்கும் போதே ஒரு சைவப் பிரசாரகாரரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் என்னைப் போல் படித்தவர்களும் சன்மார்க்கருமாய் அநேகர் வருவார்கள். ஆனால் கைமாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப்போல் ஒருவரும் வரார் இதுவே என்னுடைய கடைசிப் பிரசங்கம்.

ஆயினும் நாவலர் இத்தனை தூரம் அஞ்சியிருக்கத் தேவையில்லை. ஏனெனில் அவரது மதப் பிரசர்ரம் அவரைப் பின் பற்றியோரால் பெரும் உற்சா கத்துடன் தொடரப்பட்டது.

கோப்பாய் சபாபதி நாவலர் (1844- 1903) என்பவர் பெரும் ஆதரவாளராக இருந்து நாவலருக்குப் பின்னர் சைவத்தை மேம்படுத்துவதில் புகழ் பெற்றவரானார்.

(தொடரும்)

# வெளிநாட்டில் தொழில் செய்பவர்களுக்காக அரசால் 10 பில்லியன் ரூபாய் கடன் உதவி

## அமைச்சர் ஹரின் தகவல்



(கொழும்பு)

வெளிநாட்டில் தொழில் புரிபவர்களுக்கென 10 பில்லியன் ரூபா கடன் உதவியை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்கு பயணிப்பவர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களில் அதிகரித்துள்ளது. சொந்தமாக வீடுகளை நிர்மாணித்து கொள்வதற்காகவும் தனது வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் தேவை எழுந்துள்ளதாலேயே இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை நாடிச்செல்வதற்கான தேவை எழுந்துள்ளது.

ஆயினும் அவர்களின் எதிர்பார்ப்புக்களை போன்று தேவைகள் நிறைவு செய்யப்படுவதில்லை. அவர்களின் எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் நிவர்த்தி செய்து கொள்வதற்காகவே வெளிநாடுகளில் தொழில் புரிபவர்களுக்கென தனியாகக் கடன் உதவிகளைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் கடன் திட்டத்தினூடாக 10 பில்லியன் ரூபா பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் வெளிநாட்டு தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு தொடர்பிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-4)

# மேலும் 27 வகையான மருந்துகளின் விலையை குறைக்க நடவடிக்கை



(கொழும்பு)

மேலும் 27 வகையான மருந்துகளின் விலையை குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ரத்மலானையிலுள்ள அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலை கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதற்கமைய விலை குறைக்கப்பட்ட மருந்து வகைகளின் எண்ணிக்கையை 100 ஆக அதிகரிக்கவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-4)

# கொழும்பில் சனத்தொகை அடர்த்தி; தொழுநோய் பரவும் அபாயம்!

(கொழும்பு)

கொழும்பு நகரில் சனத்தொகை அடர்த்தி கூடிய இடங்களில் தொழுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை முழுவதிலும் உள்ள தொழுநோயாளர்களது எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இது 11 சதவீதமென கொழும்பு பிரதான சுகாதார வைத்திய உத்தியோகத்தர் டாக்டர் றுவன் விஜயமுனி தெரிவித்தார்,

கொட்டாஞ்சேனை, நாரஹென்பிட்டி, வனாத்தமுல்ல, தெமட்டகொட, கிராண்ட்பாஸ் ஆகிய இடங்களில் தொழு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சு அமுலாக்கும் திட்டங்கள் காரணமாக தொழுநோயாளர்களை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை வழங்க முடிந்ததாக டாக்டர் விஜயமுனி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் விஜயமுனி இந்தத் தகவல்களை வெளியிட்டார். (இ-4)

# இலங்கையில் 250 பாலங்களை அமைக்க பிரித்தானிய அரசாங்கம் நிதியுதவி

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டு

(லண்டன்)

இலங்கையில் 250 கிராமிய பாலங்களை அமைக்க பிரித்தானிய அரசாங்கம் நிதியளிக்கவுள்ளதாக பிரித்தானிய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக 49 மில்லியன் பவுண்ட்ஸ்களை வழங்கவுள்ளதாக பிரித்தானிய சர்வதேச வர்த்தக செயலாளர் லியாம் பொக்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியுதவியின் மூலம் கிராமப் புற மக்களின் மற்றும் மாணவர்களின் போக்குவரத்து நலன்களை பாதுகாக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே பிரித்தானிய அரசாங்கத்தின் உதவியின் கீழ் 2011 இல் 210 கிராமிய பாலங்களும், 2014இல் 618 பாலங்களும் செப்பனிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)




**இந்துஜா**

அடுத்த நிமிடம் நிச்சயம் இல்லாத வாழ்க்கை இருக்கும் வரை மற்றவரை சந்தோசப்படுத்துவோம்



**அன்பழகி**

கணவன் மனைவியின் அன்பு என்பது சண்டை போடாமல் வாழ்வதில் அல்ல! சண்டை போட்டாலும் திரும்பவும் வந்து மனதைப் சமாதானப்படுத்துவதில் தான் இருக்கிறது



**பார்த்தீபன்**

ஒவ்வொரு சோகமும் துன்பமும் வாழ்க்கையில் பாடத்தைக் கற்றுத் தரவே வருகின்றது



**கவிப்பிரியா**

விவசாயி ஏழை என்றால் அவர் விளைவித்ததை வாங்கி உண்ணும் நீங்கள் எப்படி பணக்காரராக இருக்க முடியும்...?



**சாவித்திரி**

சொர்க்கத்தை நகரத்தில் (நரகத்தில்) தேடாதீர்கள்... சற்று தள்ளி வந்து பாருங்கள் கிராமத்தை



**கலையரசி**

எந்தச் சூழ்நிலையிலும் எவரையும் நம்பாதிருங்கள்... இப்போதுள்ள மனிதர்கள் எல்லாம் எவ்வித குற்றவுணர்ச்சியும் இல்லாமல் துரோகமிழைக்கக் கற்றுக்கொண்டுள்ளனர்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாராளுமன்றத் தேர்தலுக்கான வழிமுறைகளை முன்னெடுக்கவும்

## அரசிடம் தினேஷ் எம்.பி.வலியுறுத்து



(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையில்லாமலேயே அதிகாரம் செலுத்தி வருகின்றது. அரசாங்கத்தை உறுதிப்படுத்த தேசிய அரசாங்கத்தை அமைப்பதாக குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. உறுதியான அரசாங்கத்தை அமைக்க வேண்டுமாயின் பாராளுமன்றத் தேர்தலுக்கான வழிமுறைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன வலியுறுத்தினார்.**

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கம் உருவாக்கம் என்பது சாத்தியமற்றதன் காரணமாகவே அரசாங்கம் அப்பிரேரணை மீதான விவாதத்தை தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளது.

இப்பிரச்சினைகள் அனைத்திற்கும் தேர்தல் ஊடாகவே தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்.

ஆகவே பொய்யான விடயத்திற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்காமல் தேசிய அரசாங்கம் உருவாக்கம் தொடர்பிலான பிரேரணையையும் மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 36 படகுகள் மீண்டும் தமிழகத்துக்கு

(சென்னை)

இலங்கையில் தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்களுக்கு சொந்தமான படகுகளில் 36 படகுகள் மீண்டும் தமிழகத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.



த ஹிந்து இதனைத் தெரிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டமைக்காக பறிமுதல் செய்யப்பட்ட படகுகளில், 47 படகுகள் விடுவிக்கப்பட்டன.

அவற்றை திருத்தி மீண்டும் தமிழகத்திற்குக் கொண்டு செல்வதற்கான வேலைத் திட்டத்தை இந்திய மீன்பிடித் திணைக்களம் அமுல்படுத்தியுள்ளது.

இதன்படி இந்தியாவில் இருந்து விசேட பொறியியலாளர் குழு ஒன்று இலங்கை வந்து படகு திருத்தப் பணிகளை மேற்கொண்டதுடன், இதற்கு இலங்கை கடற்படையினரும் உதவியிருந்தனர்.

இந்த நிலையில் இதுவரையில் 36 படகுகள் திருத்தப்பட்டு மீண்டும் கொண்டு செல்லப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எஞ்சிய 11 படகுகளை மீளக் கொண்டு செல்ல முடியாத நிலையில் உள்ளதாக தெரியவருகிறது.

அவற்றுள் 4 படகுகளின் உரிமையாளர்கள் அவற்றை மீளப்பெற்றுக்கொள்ள விரும்பவில்லை என்றும், 5 படகுகள் திருத்த முடியாத அளவுக்கு சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசாங்கம் நடவடிக்கை

### துறைசார் அமைச்சர் தகவல்

(கொழும்பு)

மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் பீ.ஹறிசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் திணைக்களப் பிரச்சினைகள் தொடர்பாக அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்வது, சட்டவிரோதக் கொடுக்கல்-வாங்கல் ஆகியவற்றைத் தடுப்பதற்காகவே மீனவர்களுக்கு இவ்வாறு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

கடற்றொழிலாளர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், அனைத்து மீன்பிடிப் படகுகளுக்கும் ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-4)

# போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை அமுல்படுத்தப்பட வேண்டும்



## சிரேஷ்ட சட்டத்தரணி மனோஜ் கமகே ஆதரவு

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்குவது மனித உரிமை மீறல் எனின், அக் குற்றவாளிகளின் குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களின் மனித உரிமைகள் ஏற்கனவே மீறப்பட்டுள்ளன அல்லவா? எனவே இத்தகைய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு மரண தண்டனையை அமுல்படுத்தாவிடின் மனித உரிமைகள் மீறப்படுவதற்கான வாய்ப்பு அதிகம் ஏற்படும் என தேசிய ஒற்றுமைக்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

குற்றவாளிகளின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதை விடவும், அவர்களின் குற்றச்செயல்களால் பாதிக்கப்படுபவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதே அவசியமானதாகும் எனவும் அவர் தெரிவித் தார்.

போதைப்பொருள் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை அமுல்படுத்த போவதாக ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளமையைத் தொடர்ந்து, மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை அமுல்படுத்துவது தொடர்பில் தேசிய ஒற்றுமைக்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-4)




# பூனை பிரபு!



முன்னொரு காலத்தில் உழவன் ஒருவன் பூனை ஒன்றை வளர்த்து வந்தான். கிழடாகிப் போன அந்தப் பூனையால் எலிகளைப் பிடிக்க முடியவில்லை.

இந்தப் பூனையால் எந்தப் பயனும் இல்லை. இதைக் காட்டில் விட்டு விடுவோம் என்று நினைத்தான் அவன். அப்படியே அதைக் காட்டில் விட்டுவிட்டு வந்தான்.

அங்கே உலாவிக் கொண்டிருந்தது பூனை. பெண் நரி ஒன்று அதைப் பார்த்தது.

"ஐயா! தாங்கள் யார்? இப்பொழுது தான் தங்களை முதன் முறையாகப் பார்க்கிறேன்" என்று கேட்டது அது.

"நான் பூனைப்பிரபு" என்று கம்பீரமாகச் சொன்னது பூனை.

அதன் அழகிலும் கம்பீரத்திலும் மயங்கியது நரி. "ஐயா! என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். உண்மையுள்ள மனைவியாக நான் நடந்து கொள்வேன். உங்கள் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பேன்" என்றது.

பூனையும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது. இரண்டிற்கும் திருமணம் நடந்தது.

தான் சொன்னபடியே நடந்தது நரி. தனியே சென்று கோழிக் குஞ்சுகளைப் பிடித்து வந்து பூனைக்கு உணவைக் கொடுக்கும். சில சமயம் அது பட்டினியாகவே கிடக்கும்.

ஒரு நாள் உணவு தேடச் சென்றது நரி. வழியில் அதை முயல் ஒன்று சந்தித்தது.

"நண்பனே! உன் வீட்டிற்கு நான் வரலாம் என்று இருக்கிறேன். எப்பொழுது வருவது?" என்று கேட்டது முயல்.

"என் வீட்டிற்கு வரும் எண்ணத்தை விட்டுவிடு. அங்கே பூனைப்பிரபு இருக்கிறார். அவர் கொடூரமானவர். உன்னைக் கண்டால் ஒரு நொடியில் கொன்று தின்று விடுவார்" என்றது நரி.

அங்கிருந்து ஓடிய முயல் வழியில் ஓநாயைச் சந்தித்தது. "உனக்குச் செய்தி தெரியுமா? நரியின் வீட்டில் பூனைப் பிரபு இருக்கிறாராம். அவர் மிகக் கொடூரமானவராம். யாரையும் கொன்று தின்று விடுவாராம்" என்றது அது.

இந்த விந்தையான செய்தியைப் பன்றியிடம் சொன்னது ஓநாய். பன்றி இதைக் கரடியிடம் சொன்னது.

முயல், ஓநாய், பன்றி, கரடி நான்கும் ஒன்றாகக் கூடின.

"எப்படியாவது பூனைப் பிரபுவை நாம் பார்க்க வேண்டுமே?" என்றது கரடி.

"உயிரின் மீது உனக்கு ஆசை இல்லையா?" என்று கேட்டது முயல்.

"எனக்கு நல்ல வழி ஒன்று தோன்றுகிறது. நாம் நால்வரும் சேர்ந்து பெரிய விருந்திற்கு ஏற்பாடு செய்வோம். பூனைப் பிரபுவையும் நரியையும் விருந்திற்கு அழைப்போம்" என்றது ஓநாய்.

எல்லோரும் இதற்கு ஒப்புக் கொண்டனர்.

மேசையின் மேல் விதவிதமான உணவுப் பொருள்கள் பரிமாறப்பட்டன.

"யார் சென்று பூனைப் பிரபுவை அழைப்பது?" என்ற சிக்கல் எழுந்தது.

"எனக்கு தூங்கி வழிகின்ற முகம். நான் சென்று எப்படி அழைப்பேன்?" என்று மறுத்தது பன்றி.

"எனக்கு அதிக வயதாகி விட்டது. உடல் நலமும் சரியில்லை" என்றது ஓநாய்.

"ஏதேனும் ஆபத்து என்றால் என்னால் வேகமாக ஓட முடியாது" என்றது கரடி.

மூன்றும் முயலைப் பார்த்து, "விருந்துச் செய்தியை நீதான் சொல்லிவர வேண்டும்" என்றன.

முயல் நடுங்கிக் கொண்டே நரியின் வீட்டை அடைந்தது. நீண்ட நேரம் வெளியிலேயே காத்திருந்தது.

வெளியே வந்த நரி முயலைப் பார்த்து வியப்படைந்தது.

"பன்றி, ஓநாய், கரடி மூன்றும் என்னை இங்கே அனுப்பின. நால்வரும் சேர்ந்து விருந்திற்கு ஏற்பாடு செய்துள்ளோம். உங்களுக்காகவே இந்த விருந்து. நீங்களும் பூனைப்பிரபுவும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்" என்றது முயல்.

"நல்லது. நான் விருந்திற்கு வருகிறேன். பூனைப் பிரபுவும் என்னுடன் வருவார். நாங்கள் வரும் போது நீங்கள் நால்வரும் எங்காவது ஒளிந்து கொள்ளுங்கள். பூனைப்பிரபு உங்களைப் பார்த்தால் நீங்கள் செத்தீர்கள். விருந்து எங்கே நடக்கிறது?" என்று கேட்டது நரி.

இடத்தைச் சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தது முயல். தன் நண்பர்களைச் சந்தித்து நடந்ததைச் சொன்னது அது.

பயந்து போன நான்கும் என்ன செய்வது என்று சிந்தித்தன.

"நான் அந்த மரத்தில் ஏறிக் கொள்கிறேன்" என்றது கரடி.

"அந்தப் புதரில் நான் ஒளிந்து கொள்கிறேன்" என்றது ஓநாய்.

"உன் அருகிலேயே நானும் பதுங்கிக் கொள்கிறேன்" என்றது முயல்.

"அடர்ந்த அந்த மரங்களுக்குப் பின்னால் நான் மறைந்து கொள்கிறேன்" என்றது பன்றி. பூனைப்பிரபுவும் நரியும் வரும் ஓசை கேட்டது. நான்கும் பதுங்கிக் கொண்டன. பலவிதமான உணவுப் பொருட்களைப் பார்த்தது பூனை. அதற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "மியாவ், மியாவ்" என்று கத்திக் கொண்டே சாப்பிடத் தொடங்கியது.

புதரில் இருந்த ஓநாய், "எவ்வளவு பயங்கரமான விலங்கு? என்ன கொடூரமான குரல்? சாப்பிடும் வேகத்தைப் பார்த்தால் நம் விருந்து அதற்குப் போதாது. நம்மையும் கொன்று தின்னும் போல இருக்கிறது" என்றது.

"ஆமாம்" என்று நடுங்கிக் கொண்டே சொன்னது முயல்.

மரத்தில் இருந்த கரடியும் மறைந்து இருந்த பன்றியும் நடுங்கின.

பூனை விருந்தை வயிறார உண்டது. மேடையின் மேல் படுத்துத் தூங்கத் தொடங்கியது.

மரத்தின் மறைவில் பதுங்கி இருந்த பன்றியின் வாலைக் கொசு ஒன்று கடித்தது. உடனே பன்றி தன் வாலை அசைத்தது.

சத்தம் கேட்டு விழித்தது பூனை. பன்றியின் வாலை எலி என்று தவறாக நினைத்தது அது.

"மாட்டிக் கொண்டாயா?" என்று கத்திக் கொண்டே எலியைப் பிடிக்கப் பாய்ந்தது. நேராகப் பன்றியின் முகத்தில் போய் மோதியது அது.

எதிர்பாராமல் நடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது பன்றி. அங்கிருந்து "தப்பித்தேன்" என்று கத்திக் கொண்டே ஓட்டம் பிடித்தது. பன்றியைக் கண்டு பயந்த பூனை ஒரே பாய்ச்சலில் அருகில் இருந்த மரத்தில் ஏறியது.

அங்கிருந்த கரடி தன்னைத்தான் பூனைப்பிரபு கொல்ல வருகிறார் என்று பயந்தது. விரைந்து மரத்தின் உச்சிக் கிளைக்குச் சென்றது. அதன் எடை தாங்காமல் கிளை முறிந்தது. புதரில் மறைந்திருந்த ஓநாயின் மேல் விழுந்தது அது.

அலறி அடித்துக் கொண்டு ஓநாயும் ஓட்டம் பிடித்தது. முயலும் அதைத் தொடர்ந்து ஓடியது. வலியைத் தாங்கிக் கொண்டு "தப்பித்தோம் பிழைத்தோம்" என்று கரடியும் ஓடியது.

நீண்ட நேரத்திற்குப் பிறகு நான்கும் சந்தித்தன. "பூனைப்பிரபு பார்ப்பதற்குச் சிறியவராக இருக்கிறார். நம் நால்வரையும் கொன்று தின்றிருப்பார். நல்ல வேளை தப்பித்தோம்" என்றது கரடி. மற்ற மூன்றும் "ஆமாம்" என்றன.

அதன் பிறகு பூனைப்பிரபுவின் வழிக்கே அவை செல்லவில்லை.

## காகம் வந்திருக்கிறேன்

குட்டி பாப்பா எட்டிப் பாரு
காகம் வந்திருக்கேன்!
அம்மா சாதம் ஆக்கையில்
கவளம் சோற்றை

மேலே வைத்து விடு
உற்றார், உறவுகள், நண்பர்களை
அழைத்து தினமும் உண்டிடுவேன்,
கவளம் சோற்றை
நான் தினமும் உண்டிடுவேன்.

அப்படி தினமும் உண்பது
உன் முன்னோர் என்பது
பெரியோர் நம்பிக்கை
இது உண்மை பொய்
எதுவும் எண்ணாமல்,



பறவைக்கு உணவை
தினமும் கொடுத்தால்
புண்ணியம் சேரும்,
பாப்பா புண்ணியம் சேரும்

## பொது அறிவு

- உலகில் மொத்தம் எத்தனை வானிலை ஆராய்ச்சி மையங்கள் உள்ளன?
  12.500
- புயல் பற்றிய எச்சரிக்கை கொடுக்கத் துவங்கிய ஆண்டு?
  1886
- இந்தியாவில் எவ்வளவு உயரம் வரையில் காற்றைப் பற்றிய புள்ளி விபரத்தை அறிய இயலும்?
  20 கி.மீ.
- கஃபீன் இல்லாத ஊட்டச்சத்து பானம் எது? அதை அறிமுகப்படுத்தியவர் யார்?
  உர்ஸா. இதனை அறிமுகப்படுத்தியவர் ரமேஸ் சவுகான் (பிஸ்லெரி நிறுவனத்தின் நிறுவுநர்.

தாய்நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால்தான் உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க முடியும்.
– சீனப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## போதைவஸ்தை ஒழிப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

தமிழ்நாட்டின் திரைப்படங்களைப் பார்க்கும் போதெல்லாம் இப்படியெல்லாம் நடக்குமா? என்ற கேள்வி எழுவதுண்டு.

தமிழ்நாட்டில் நடக்கின்ற சம்பவங்களே அங்கு திரைப்படங்களாகின்றன என்று கூறுவோரும் உள்.

ஆம், இப்போது தமிழ்நாட்டுத் திரைப்படக் காட்சிகள் எங்கள் வாழ்வியலில் சாதாரண சம்பவங்களாகிவிட்டன.

திரைப்படத்தில் வருகின்ற வாள்வெட்டுக் கலாசாரம், அரசியல் சார்ந்த ஊழல்கள், காவல்துறையினரின் நேர்மையற்ற போக்குகள், போதைவஸ்து கடத்தல் என்பன எங்கள் மண்ணில் சாதாரணமாகிவிட்டன எனும் போது, தமிழகத்து சினிமாப் படங்கள் எங்கள் இளைஞர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் எத்துணை தூரம் தாக்கம் செலுத்தியுள்ளன என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

முன்னைய காலத்தில் திரையரங்குகளில் வெளியிடப்படுகின்ற திரைப்படங்களை மிகச் சொற்பமானவர்களே பார்வையிடுவர்.

ஒரு திரைப்படம் நூறு நாள் நின்று பிடித்தால் அதுவே வெற்றிப் படமாக கணிக்கப்படும்.

அவ்வாறு நூறு நாட்கள் நின்று பிடிக்கின்ற திரைப்படங்கள் மிக உன்னதமான வாழ்க்கைத் தத்துவத்தைப் போதிப்பதாக இருக்கும்.

அந்தத் திரைப்படத்தில் வருகின்ற அர்த்தமுள்ள பாடல்கள் எங்கள் இளைஞர்களை வழிப்படுத்தின.

ஆக, அன்றைய திரைப்படங்கள் மனித சமூகத்தை முன்னேற்றுவதாக; சீர்திருத்துவதாக இருக்க, இன்றைய திரைப்படங்கள் வாள், கத்தி, துப்பாக்கி சகிதமே ஆரம்பமாகிறது.

இதன் விளைவாக எங்கள் இளைஞர்களும் திரைப்படங்களை நிஜமாகப் பாவனை செய்து கத்தி, வாள் சகிதம் உலா வருவதுடன் மோட்டார் சைக்கிள்களையும் வாகனங்களையும் மிக வேகமாக செலுத்தி கவிழுகின்ற அபத்தங்கள் நடக்கின்றன.

இதில் மிக மோசமான கொடுமை என்னவெனில், போதைவஸ்து கடத்தல்களும் மது பாவனையுமாகும்.

ஆம், இன்று எங்கள் வடபுலம் போதைவஸ்துப் பாவனைக்கும் கடத்தலுக்குமான கேந்திர நிலையமாக ஆக்கப்படுவதை அறிய முடிகின்றது.

அதிலும் குறிப்பாக போதைவஸ்துப் பாவனையை எங்கள் மாணவச் செல்வங்களிடம் பரப்புரை செய்வதன் மூலமாக வடபுலத்தை போதைவஸ்துக் கடத்தலுக்குரிய கேந்திர நிலையமாக மாற்றப்படுகின்ற சதித்திட்டங்கள் நடப்பதையும் உணர முடிகின்றது.

இது எங்கள் இனத்தை எங்கள் சந்ததியை வேரறுக்கின்ற கொடும் செயலாகும்.

எனவே இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் முன்னெடுத்துள்ள போதைவஸ்துவுக்கு எதிரான செயற்றிட்டத்துக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி போதைவஸ்தை பிடுங்கி எடுக்க வேண்டும்.

# கனடாவுக்கு அனுப்புவதாக தெரிவித்து 35 இலட்சம் ரூபாய் பண மோசடி

## சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

கனடா நாட்டுக்கு அனுப்பி வைப்பதாக 35 லட்சம் ரூபாய் பணத்தை வாங்கிவிட்டு ஏமாற்றினார் - நம்பிக்கை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மத போதகரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கனடாவுக்கு அனுப்பி வைப்பதற்கு அந்த நபரிடம் 45 லட்சம் ரூபாய் பணம் வேண்டும் என்றும் போதகர் தெரிவித்துள்ளார். அதன்படி முதற்கட்டமாக 35 லட்சம் ரூபாயை வழங்குமாறு போதகர் கேட்டுள்ளார். முதல்கட்டதொகையை போதகரின் வங்கியில் சம்பந்தப்பட்ட நபரால் வைப்பிலிடப்பட்டுள்ளது.

வங்கியில் பணம் வைப்புச் செய்து ஒரு வருடகாலமாகியும் கனடாவுக்கு அனுப்பி வைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் போதகர் செய்யவில்லை. அதனால் பணத்தை வைப்பிலிட்ட நபர், வங்கியில் வைப்புச் செய்த சிட்டையை ஆதாரமாகக் கொண்டு யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவில் முறைப்பாட்டை வழங்கினார்.

முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத் தடுப்புப் பொலிஸார், சந்தேகநபரை கைது செய்தனர். அவரை நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தினர்.

"சந்தேகநபரான போதகர் 35 லட்சம் ரூபாய் நிதியை மோசடி செய்துள்ளார். அவருக்கு யாழ்ப்பாணத்தில் நிரந்தர வதிவிட முகவரி இல்லை.

அத்துடன், சந்தேகநபருக்கு எதிராக பல முறைப்பாடுகள் உள்ளன. மேலும் சில முறைபாடுகள் அவருக்கு எதிராக வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வழக்குத் தொடர்பிலும் விசாரணைகள் நிறைவடையாத நிலையில் அவரை பிணையில் விடுக்க வேண்டாம்" என்று சிறப்புக் குற்றத்தடுப்பு பொலிஸார் மன்றில் சமர்ப்பணம் செய்தனர்.

சந்தேகநபர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி தவபாலன் பிணை விண்ணப்பத்தை முன்வைத்து நீண்ட சமர்ப்பணத்தை செய்தார்.

"சந்தேகநபர் பலாங்கொடையில் பிறந்தவர். போதகர் பணிக்காக யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார். பிறந்த இடத்தில் நிரந்தர முகவரி இருக்கவேண்டும் என்ற அவசியம் கிடையாது. நான் ஏழாலையில் பிறந்தேன். நல்லூரில் வசிக்கின்றேன்" என்று சமர்ப்பணம் செய்தார்.

இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்த நீதிவான் ஏ.எஸ்.பி.போல், கட்டளையை வழங்கினார்.

"இரண்டு தரப்பினரின் சமர்ப்பணத்தையும் மன்று சீர்தூக்கி ஆராய்ந்தது. சந்தேகநபருக்கு எதிராக பல முறைப்பாடுகள் உள்ளன. இந்த வழக்கிலும் 35 லட்சம் ரூபாய் பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் விசாரணைகளையும் பொலிஸார் நிறைவு செய்வில்லை.

அதனால் பிணை மறுப்புச் சட்டத்தின் 14 (1)(பி) அடிப்படையில் சந்தேகநபர் சார்பான பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்படுகின்றது. சந்தேகநபரை வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்க மன்று உத்தரவிடுகின்றது" என்று நீதிவான் ஏ.எஸ்.பி.போல் கட்டளை வழங்கினார். (ம-3)

### ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு

## அரச நிறுவனங்களில் ஊழல், மோசடி முறைப்பாடுகளை பொறுப்பேற்கின்றது

(கொழும்பு)

2015 ஜனவரி மாதம் 14 ஆம் திகதி முதல் 2018 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ளதாகக் கருதப்படும் ஊழல் செயற்பாடுகள், மோசடிகள் பற்றி ஆராய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முறைப்பாடுகளை பொறுப்பேற்க ஆரம்பித்துள்ளது.

2015 ஜனவரி மாதம் 14 ஆம் திகதி முதல் 2018 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ளதாகக் கருதப்படும் ஊழல் செயற்பாடுகள், மோசடிகள், குற்றவியல் ரீதியான நம்பிக்கை மோசடிகள், சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துதல், ஏமாற்றுதல் மற்றும் அதிகாரம் அல்லது தத்துவம், அரச வளங்கள் மற்றும் சிறப்புரிமைகளை முறையற்ற விதத்தில் பயன் படுத்துதல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் சொல்லப்பட்ட குற்றங்கள் மற்றும் தவறான செயற்பாடுகளின் பெறுபேறாக அரச சொத்துக்களுக்கு, அரச வருமானத்துக்கு பாரியளவு நட்டம் அல்லது சேதத்தை ஏற்படுத்தியிருத்தல் தொடர்பில் அரசியல் பதவி வகித்த அல்லது தொடர்ந்தும் பதவி வகித்துக் கொண்டிருக்கும் ஆட்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் நியதிச் சபை உத்தியோகத்தர்களாகவும் பணியாற்றிய மற்றும் தொடர்ந்து சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஆட்களுக்கு எதிராகப் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பொது மக்களின முறைப்பாடுகள், தகவல்கள் மற்றும் ஏனைய விடயங்களைக் கோருதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல் இந்த ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

குறிப்பிடப்பட்டுள்ள முறைபாடுகள், தகவல்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் துரிதமாக, பக்கச்சார்பற்ற, விரிவான புலனாய்வுகளையும் விசாரணைகளையும் நடத்துதல் இந்த ஆணைக் குழுவின் ஊடாக மேற்கொளளப்படவுள்ளது.

ஆணைக்குழுவுக்கு வாய் மூலம் சமர்ப்பிப்பதற்கு விருப்பமுள்ள நிறுவனங்கள்/ ஆட்கள் 2019 மார்ச் மாதம் 07ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரான திகதியொன்றைக் குறித் தொதுக்கிக் கொள்வதற்கு 0112665382 என்ற இலக்கத்துடன் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும். (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5.30 மணி வரை **யாழ். பிரதேசத்தில** ஆஸ்பத்திரி வீதி காரைநகர் வீதி சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி சந்தி வரை, சீனி வாசகம் வீதி, சிவன்பண்ணை வீதியின் ஒரு பகுதி, கே.கே.எஸ் வீதி, துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து சத்திரச் சந்தி வரை, சப்பல் வீதி, யாழ் 1ம், 2ம், 3ம், 4ம் குறுக்குத் தெருக்கள் வேம்படி வீதி சந்தி வரை, பிரதான வீதி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதா கபே வரை, யாழ் சிறைச்சாலை, யாழ் பொலிஸ் நிலையம், யாழ். துரைய்ப்பா விளையாட்டரங்கு, இலங்கை தொலை த்தொடர்பு நிலையம், யாழ் பொது நூலகம், மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தொகுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையின் பிராந்தியமுகாமையாளர் அலுவலகம், பிரம்படி கொக்குவில், மாவடி திருநெல்வேலி, யாழ்.மருத்துவ பீட பிரதேசம், யாழ்.மருத்துவ பீட அரங்கு, வாகையடி சந்தி மீசாலை பிரதேசம், டச் றோட மீசாலை பிரதேசம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கற்சிலைமடு, பேராறு, மன்னகண்டல், வித்தியாபுரம், தட்டையார் மலை, முத்து விநாயகர்புரம், முத்தையன்கட்டு, கனகரத்தினபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** நாணாட்டான் பிரதேசம், செம்மண்தீவு, அச்சங்குளம், எருவிட்டான், அறுகுகுன்று, அளவக்கை, மாவிலங் கேணி, வாழ்க்கை பட்டான்கண்டல், பல்லங் கோட்டை, பண் டாரி குளம், ஓலைத்தொடு வாயிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலைப்பாடு ஐஸ்தொழிற்சாலை, Palmyra House, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ்தொழிற்சாலை, தலை மன்னார் இராணுவ முகாம, மன்னார் வைத்தியசாலை ஆகிய பிரதேசாங்களிலும் மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- எல்லா இடங்களிலும் கடவுள் நிறைந்துஇருக்கிறார். காணும் எல்லாப் பொருள்களிலும் பரம்பொருளைக் காண முயலுங்கள்.
- குறிக்கோளுக்குச் செலுத்தும் முக்கியத்துவத்தை அதை அடைய மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்துவது அவசியம்.
- நல்லதையே சிந்தியுங்கள். நல்லதை மட்டுமே செய்யுங்கள்.
- கண்டன வார்த்தை ஏதையும் சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக் கொண்டு உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள்.
- விரிந்து கொண்டே செல்வது தான் வாழ்க்கை. மனம் குறுகிக் கொண்டு செல்வதை மரணம் என்று தான் சொல்ல வேண்டும்.
- சில நேரங்களில் துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசிரியராக அமைந்து விடுகிறது.
- நல்ல மனிதனை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சரிசமமான இடத்தை வகிக்கின்றன.
- மனத்தூய்மை மிக்கவர்கள் இந்த பிறவியிலேயே கடவுளைக் காணும்பேறு பெறுகிறார்கள்.



கிளிநொச்சி தர்மபுரம் மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் ஓர் அங்கமாக ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிளோட்டப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. (க)

# புதிய மைல்கல்லை எட்டும் இலங்கை அணியின் தலைவர்



இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் திமத் கருணரத்ன இலங்கை துடுப்பாட்ட வீரராகப் புதிய மைல்கல்லை எட்டவுள்ளார்.

திமத் கருணரத்ன டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இதுவரை 3 ஆயிரத்து 988 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

இன்னும் 12 ஓட்டங்கள் எடுத்தால் 4 ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டு விடுவார் .

இதுவரை இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் 10 பேர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 4 ஆயிரம் ஓட்டங்களை குவித்துள்ளனர்.

கருணரத்ன இன்னும் 12 ஓட்டங்களை எடுத்தால், இலங்கை அணி சார்பாக 4 ஆயிரம் ஓட்டங்களை எடுத்த 11 ஆவது வீரர் என்ற மைல் கல்லை எட்டி விடுவார்.

அடுத்து நடக்கும் தொடரில் இந்த மைல்கல்லை கருணரத்ன எட்டி விடுவார் என ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள். (க)

# அணியில் இடம்பிடித்தார் அதிரடி வீரர் கெய்ல்




இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான மேற்கிந்திய தீவுகள் அணியில் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் இடம் பிடித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. தற்போது டெஸ்ட் போட்டி நடைபெற்று வரும் நிலையில், எதிர்வரும் 20 ஆம் திகதி ஒருநாள் போட்டி தொடர் தொடங்க உள்ளது.


இந்த தொடரில் முதல் இரண்டு ஒருநாள் போட்டிக்கான மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மூத்த வீரரான கிறிஸ் கெய்ல் நீண்ட இடைவெளிக்குப் பிறகு அணியில் இடம்பிடித்துள்ளார்.

மேலும், நிக்கோலஸ் பூரன் முதன் முறையாக ஒருநாள் போட்டிக்கான அணியில் இடம் பிடித்துள்ள நிலையில், சாமுவேல்ஸ் காயம் காரணமாக அணியில் இடம்பெறவில்லை.

39 வயதாகும் கிறிஸ் கெய்ல் 284 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். இதில் 23 சதம், 49 அரைசதங்களுடன் 9,727 ஓட்டங்கள் குவித்துள்ளார். கடந்த ஆண்டு ஜுலை மாதம் பங்களாதேசிற்கு எதிராக விளையாடிய கெய்ல், அதன் பிறகு தற்போது தான் ஒருநாள் போட்டிக்கான அணியில் இடம் பிடித்துள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# அவுஸ்திரேலியாவின் பயிற்சியாளர் ஆகின்றார் ரிக்கி பொண்டிங்



உலகக்கோப்பை தொடருக்கான அவுஸ்திரேலிய அணியின் உதவி பயிற்சியாளராக, முன்னாள் கிரிக்கெட் வீரர் ரிக்கி பொண்டிங் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சு பயிற்சியாளர் டேவிட் சாக்கர், அண்மையில்தன்னுடைய பதவியை இராஜினாமா செய்திருக்கும் நிலையில், அதிரடி அறிவிப்பாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

5 உலகக்கோப்பை தொடரில் விளையாடியதோடு, 3 தொடர்களில் கப்டனாகவும் 2003 மற்றும் 2007 ஆம் ஆண்டுக்கான தொடரில் கோப்பையை வென்றும் அசத்திய ரிக்கி பொண்டிங்கை பயிற்சியாளர் பிரிவில் சேர்த்துள்ளது.

ஜுன் மாதம் நடைபெறவிருக்கும் உலகக்கோப்பைத் தொடரில், அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் ஜஸ்டின் லேன்ஜெர் உடன் இணைந்து உதவி பயிற்சியராகப் பணியாற்றுவார் எனத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பேசியுள்ள பயிற்சியாளர் ஜஸ்டின் லேன்ஜெர், உலகக்கோப்பையை வெல்வதற்கு என்ன தேவை என்பது ரிக்கிக்கு நன்கு தெரியும். துடுப்பாட்டக் குழுவிற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த அணிக்கும் அவர் ஒரு நல்ல வழிகாட்டியாக இருப்பார் என்று நான் நம்புகிறேன்.

அவர் விளையாட்டைப் பற்றிய ஒரு சுவாரஸ்யமான புரிதலைக் கொண்டுள்ளார்.

உயர்மட்டத்தைத் தயார் செய்ய என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார். (க)

# அந்த வதந்தியைப் போலத்தான் இந்த வதந்தியும் மாற்றமில்லை

## சேவாக் டுவீட்




இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் வீரேந்தர் சேவாக், பா.ஜ.கவில் இணைந்து மக்களவை தேர்தலில் போட்டியிட உள்ளதாக செய்திகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

விரைவில் நடக்கவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, தேசிய கட்சிகளான காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. தொகுதி வேட்பாளர்களை தேடும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளது.

தங்களுடைய கட்சி பலவீனமாக இருக்கும் இடங்களில் எல்லாம், மக்களுக்கு பிரபலமான முகங்களை நிறுத்துவது என முடிவெடுத்துள்ளது.

அதன்படி சினிமா நட்சத்திரங்கள் துவங்கி, கிரிக்கெட் பிரபலங்கள் வரை பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர். அந்த வரிசையில் ஹரியானா மாநிலத்தில் ரோஹ்தர் தொகுதியில், இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் வீரேந்தர் சேவாக் பா.ஜ.க. சார்பில் போட்டியிட உள்ளதாக செய்திகள் பரவின.

இதற்கு பா.ஜ.கவின் 'ஹரியானா மாநிலத் தலைவர் சுபாஷ் பரலா முற்றிலுமாக மறுப்பு தெரிவித்திருந்தாலும் கூட, சம்மந்தபட்ட சேவாக் எந்த கருத்தும் தெரிவிக்காமல் இருந்தது பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் சேவாக் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் கருத்து ஒன்றினை பதிவிட்டுள்ளார். அதில், "இந்த வதந்தியைப் போல சில விடயங்கள் எப்பொழுதுமே மாறாது. 2014 ஆம் ஆண்டு வந்ததை போலவே 2019 இல் வந்திருக்கும் வதந்தியில் எந்த புதுமையும் இல்லை. அப்போதும் ஆர்வம் இல்லை, இப்போதும் ஆர்வம் இல்லை" எனப் பதிவிட்டுள்ளார். (க)

# இந்தியாவுடனான தொடரில் அவுஸ்திரேலிய வீரர் மிட்செல் இல்லை



இந்திய தொடருக்காக அறிவிக்கப்பட்டுள்ள அவுஸ்திரேலிய அணியில் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் காயம் காரணமாக அணியில் இடம் பெறவில்லை.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாட உள்ளது. இது இரண்டு இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடராகும். உலகக் கிண்ணத் தொடருக்கான முன்பாக நடைபெறும் ஒருநாள் தொடர் இது என்பதால் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இந்தத் தொடருக்கான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், வேகப்பந்து வீச்சாளர் ஸ்டார்க் காயம் காரணமாக அணியில் இடம் பெறவில்லை.

நம்பிக்கை நட்சத்திரமான ஸ்டார்க் விளையாடாதது அந்த அணிக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது. அவருக்கு பதிலாக கானே ரிச்சர்ட்சன் விளையாடுவார் எனத் தெரிகிறது. அவுஸ்திரேலியா - இந்தியா இடை யிலான முதல் இருபது-20 போட்டி வருகிற 24 ஆம் திகதி நடக்கிறது.

அவுஸ்திரேலிய அணி விபரம்,
ஆரோன் பிஞ்ச் (தலைவர்),
உஸ்மான் கவாஜா, ஷான் மார்ஷ்,
ஹேண்ட்ஸ்ஹோம்,
மேக்ஸ்வெல், ஆஸ்டன் டர்னர்,
மார்கஸ் ஸ்டோனிஸ்,
அலெக்ஸ் கேரி, கம்மின்ஸ்,
நாதன கோல்ட்டர், கானே ரிச்சர்ட்சன், ஜோசன் பெக்ரன் மார்ப், நாதன் லயன், ஆடம் ஜம்பா, ஆர்க்கி ஷார்ட் (க)

## இளைஞர், யுவதி...

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இலங்கையில் வேலைவாய்ப்பில்லாத பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்கி, அனைத்து தொழிற்பயிற்சி தொழில் வழங்கல் மத்திய நிலையங்களையும் ஒன்று திரட்டி, உயர் தொழிநுட்ப முறைமைகளின் மூலம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதையும் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதையும் நோக்கமாகக்கொண்டு இலங்கை தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இலங்கை தொழில் வழிகாட்டல் நிறுவனம் ஜனாதிபதி அலுவலகத்தின் "ஸ்மார்ட் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இளைஞர், யுவதிகள் தாம் தெரிவுசெய்த தொழிற்துறையில் வெற்றிகரமாக பயணிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல், தொழில் முயற்சிக்கான சந்தர்ப்பங்கள், தொழில் வங்கிகள் உள்ளிட்ட வலையமைப்பு தொழிற்தகவல் சேவையொன்றை வழங்குதல், தனிப்பட்ட முறையில் தொழில் வழிகாட்டல் நிபுணர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு, தொழில் வழிகாட்டல் சேவையை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துதல், நாடளாவிய ரீதியில் உள்ள தொழில் வழிகாட்டல் நிறுவன வலையமைப்பொன்றை கட்டியெழுப்புதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையை முதன்மையாகக் கொண்ட பேண்தகு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பேண்தகு வாழ்வாதார அபிவிருத்தியை நோக்கி இளைஞர்களை வழிப்படுத்துதல், இளந்தலைமுறையினர் மத்தியில் வேலைவாய்ப்பின்மை பிரச்சினையை குறைத்தல், இயற்கை வளங்களை உரிய முகாமைத்துவத்துடன் பயன்படுத்தக் கூடிய புதிய கைத்தொழில் மற்றும் முதலீடுகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்துதல் போன்ற பூகோள இலக்குகள் இதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

தமது தகைமைகளுக்கு ஏற்ற தொழிலொன்றை பெற்றுக்கொள்வது எங்கே என்ற பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொள்வதற்கு இளைஞர், யுவதிகளுக்கு எதிர்காலத்தில் உள்ள பிரதான நிறுவனமாக இலங்கை தொழில் வழிகாட்டல் நிறுவனம் மாறும் என்பதுடன், தொழில் கேட்டு அரசியல்வாதிகளின் பின்னால் செல்லும் யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

இந்த நாட்டை கட்டியெழுப்புவதிலுள்ள முக்கிய சவால்களில் ஒன்று உளப்பாங்கு ரீதியான மாற்றத்திற்கும் இடர்நிலைமைகளை பொறுப்பேற்கும் இளைஞர் தலைமுறை தயாராக இல்லாதிருப்பதாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி, இந்த சவாலை வெற்றிகொள்வதற்கு இந்த புதிய திட்டம் சிறந்த உதவியாக இருக்கும் என்று குறிப்பிட்டார். எதிர்வரும் 3 மாதங்களில் இந்த தொழில் வழிகாட்டல் நிறுவனம் அனைத்து மாவட்டங்களிலும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து தொழில் வழிகாட்டல் நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அதனை பார்வையிட்டார். (ம-3)

## யாழ். மாநகர எல்...

உறுப்பினர் வரதராஜா பார்த்திபனால் மேற்குறித்த பிரேரணை முன்மொழியப்பட்டது.

அதாவது யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் தமிழ்த் தேசிய எழுச்சி நாட்கள் மற்றும் நினைவேந்தல் நாட்களில் களியாட்ட நிகழ்வுகள் மற்றும் கேளிக்கை விழாக்களை நடத்துவதை தடை செய்ய வேண்டும். குறிப்பாக தமிழ் இன அழிப்பு நாளான மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், தியாகதீபம் திலீபனின் ஆரம்ப, இறுதிநாள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரத்தில் இவ்வாறான களியாட்ட, கேளிக்கை நிகழ்வுகளை தடை செய்ய வேண்டும். அவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்படுவதற்கு மாநகர சபை அனுமதி வழங்கக்கூடாது.

மேலும் சபை எல்லைக்குள் நடைபெறும் நிகழ்வுகளில் சமூகப் பிறழ்வான நடவடிக்கைகளையும் தடைசெய்ய வேண்டும் என்ற பிரேரணையை சபையில் சமர்ப்பித்திருந்தார். குறிப்பாக யாழில் இராணுவத்தினால் நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் மதுபான போத்தலினை வெற்றி இலக்காக கொண்டு நடத்தப்பட்ட நிகழ்வினையும் சுட்டிக்காட்டினார்.

இப்பிரேரணை மீதான வாதங்கள் நடைபெற்றது. இதன் போது ஈ.பி.டி.பியின் உறுப்பினர் மு.ரெமிடியஸ் அப்பிரேரணையில் முதல் போராளியான சிவகுமாரின் உயிரிழந்த யூன் 5ம் திகதியிலும் இவ்வாறான கேளிக்கை நிகழ்வுகள் நடத்துவதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

மாவீரர் வாரம் முழுவதிலும் நிகழ்வுகளுக்கு தடை விதிக்க முடியாது என்று தெரிவித்து மாவீரர் வாரத்தில் 26, 27 ஆம் திகதிகளில் கேளிக்கை நிகழ்வுகளுக்கு தடை விதிக்கலாம் என்ற யாழ். முதல்வர் இமானுவேல் ஆனோல்ட்டின் திருத்தத்துடன் குறித்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.(ம-9)

## நல்லூர் உற்சவத்...

பட்டுள்ளதாக சபையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. யாழ் மாநகரசபை அமர்வு நேற்று இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாநகர உறுப்பினர் வ.பார்த்திபன் மேற்குறித்த விடயத்தை சபையில் தெரியப்படுத்தினார்

அதாவது கடந்த 2018ம் ஆண்டு நடைபெற்ற நல்லூர் உற்சவகால திருவிழாக்களின்போது நல்லூர் பிரதேசத்தின் பாதுகாப்பிற்கென பாதுகாப்புக் கமராக்கள் பொருத்துவதற்கு பகிரங்க கேள்வி கோரப்பட்டது. அதற்கென சில நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்தன.

இந்நிலையில் திருநெல்வேலியில் இயங்கும் குறித்த நிறுவனத்தினரின் கேள்வி கோரல் ஏற்கப்பட்டு குறித்த நிறுவனத்திடம் பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தும் பணி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் குறித்த நிறுவனத்திற்கு யாழ்.மாநகரசபையால் 6 இலட்சத்து 60 ஆயிரத்து 200 ரூபாய் கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று யாழ் மாநகரசபையில் நடைபெற்ற அமர்வின்போது நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருந்த நல்லூர் ஆலய வரவு-செலவு அறிக்கை ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கப்பட்டிருந்தது. அதனை அவதானித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாநகர சபை உறுப்பினர் பார்த்திபன் நல்லூர் சூழலில் பாதுகாப்புக் கமரா பொருத்திய செலவாக 10 இலட்சத்து 76 ஆயிரத்த 480 ரூபாய் கணக்குக் காட்டப்பட்டிருந்தமை தொடர்பில் குறித்த நிறுவனத்தினருடன் தொடர்பு கொண்டு எவ்வளவு ரூபாய் மாநகர சபையால் வழங்கப்பட்டுள்ளது எனக் கேட்டுள்ளார்.

அதன் போது குறித்த கண்காணிப்புக் கமரா பொருத்தும் நிறுவனத்தினர் வழங்கிய தகவல் உறுப்பிரை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. குறித்த நிறுவனத்திற்கு வழங்கிய தொகையை விட அதிகமாக 4 இலட்சத்து 16 ஆயிரத்து 280 ரூபாய் பணத்தினை அத் தேவைக்காக செலவிடப்பட்டதாக அறிந்த அவர் நேரடியாக அந் நிறுவனத்தினரைச் சந்தித்து கலந்துரையாடியபோது தாம் சமர்ப்பித்து வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களின் பிரதிகளை உறுப்பினருக்கு குறித்த நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து நேற்றைய அமர்வின் போது குறித்த விடயத்தைப் பிரஸ்தாபித்த உறுப்பினர் பார்த்திபன் பாதுகாப்புக் கமராக்கள் பொருத்துவதற்கென 6 இலட்சத்து 60 ஆயிரத்து 200 ரூபாய் செலவிடப்பட்டுள்ள நிலையில் செலவு அறிக்கையில் 10 இலட்சத்து 76 ஆயிரத்து 480 ரூபாய் செலவிடப்பட்டதாக மோசடி இடம்பெற்றதாக சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து சபையில் பிரசன்னமாகியிருந்த கணக்காளரைப் பதிலளிக்குமாறு முதல்வர் ஆர்னோல்ட் உத்தரவிட்ட நிலையில் அது தொடர்பில் உடனடியாகப் பதிலளிக்க முடியாது எனவும் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பதிலளிப்பதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து ஏதும் தவறு நிகழ்ந்திருப்பின் அது தொடர்பில் ஆராய்ந்து அடுத்த அமர்வில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு முதல்வர் உத்தரவிட்டார். (ம-9)

## ஜனாதிபதி மைத்தி...

கண்காணிப்பதும் உரிமைகளை உறுதி செய்வதும் மனித உரிமை ஆணையகத்தின் பணிகளில் ஒன்று என தெரிவித்துள்ளார்.

கைதிகள் உரிமைகள் மற்றும் அவர்களிற்கான தண்டனைகள் குறித்து மனித உரிமை ஆணையம் தகவல்களை முன்வைப்பதை குற்றவாளிகளை பாதுகாக்க முயல்வதாக அர்த்தப்படுத்துவது தவறானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சிறைகளில் விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறித்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் கவலை வெளியிட்டுள்ளனர். இதன் காரணமாக ஆணைக்குழு விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரிக்கு கடிதமொன்றை அனுப்பியது. அவர் அதற்கு பதில் அளித்துள்ளார் என தீபிக உடகம குறிப்பிட்டுள்ளதுடன், கைதிகளும் மனிதர்களே என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மாலியில் உள்ள இலங்கையின் அமைதிகாக்கும் படையினரை மீள அழைப்பது மனித உரிமை ஆணையத்தின் நடவடிக்கைகளால் தாமதமானது என ஜனாதிபதி தெரிவித்திருப்பது தவறானது எனவும் தீபிக உடகம தெரிவித்துள்ளார்.

மாலியில் இலங்கை படையினர் கொல்லப்பட்டமைக்கு இலங்கை மனித உரிமை ஆணையகத்தின் மீது பழியை போடுவது கடும் கரிசனத்தையும் வேதனையும் அளித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எங்களது சுதந்திர தன்மை காரணமாகவும் எங்கள் மீதான நம்பிக்கை காரணமாகவும் ஐ.நா அமைதிப்படையில் இடம்பெறும் படையினர் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பை ஐ.நா எங்களிடம் வழங்கியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.(ம-3)

## வயல் கிணற்றில்...

பாதுகாப்பாக மீட்கப்பட்ட குறித்த பாம்புகள் பின்னர் அயலில் உள்ள காட்டுப் பகுதியில் கொண்டு சென்று விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

குறித்த பாம்புகள் தற்போதைய நெல் விளைச்சல் காலத்தில் வயல்களினூடாக இரை தேடிச் சென்று குறித்த கிணற்றினுள் விழுந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ம-3)

## காணாமல் ஆக்க...

முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம் நீண்டகாலமாக தீர்க்கப்படாத அல்லது உண்மை வெளிப்படாத மர்மமான நிலையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் தான் பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள், அரசின் ஆணைக் குழுக்களில் முறையிட்டு நீதிகோரி ஏமாந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் 5 மாவட்டங்களில் கடந்த 650 நாட்களுக்கு மேலாக வீதியோரங்களில் போராடிக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறு போராடிவரும் உறவுகளுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த போராட்டத்தில் சமூகவலைத்தள நண்பர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு அமைதியான முறையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு ஆதரவு வழங்கி அரசிடம் நீதிக்கோரிக்கையை முன்வைக்க ஒன்றிணைய வேண்டும் என்று சமூவலைத்தள நண்பர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-9)

## சிறுமி ஒருவரை...

மல்லாகம் பகுதியில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கும் பெப்ரவரி 24 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் 23 வயதுடைய நபர் ஒருவர் 15 வயது நிரம்பிய சிறுமி ஒருவரை அவரது பெற்றோரின் பாதுகாப்பில் இருந்து சட்டரீதியான அனுமதி இன்றி கடத்திச் சென்று பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரிக்கப்பட்டு கடந்த 2017 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 3 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பகிர்வுப் பத்திரம் யாழ் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 2018ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி குற்றப்பகிர்வுப் பத்திரம் எதிரிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டது. அப்போது எதிரி தான் சுத்தவாளி என மன்றுரைத்தார். அதனால் வழக்கு விளக்கத்துக்கு விடப்பட்டது.

பின்னர் குறித்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கு தொடுநர் தரப்பில் அரசசட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் முன்னிலையாகியிருந்தார். எதிரிக்கு குற்றப்பகிர்வுப்பத்திரம் வாசித்துக் காட்டப்பட்டது. எதிரிதான் குற்றவாளி என ஒப்புக்கொண்டார்.

அதனடிப்படையில் இளைஞரின் முன்னைய கால நடத்தை, இருவருக்குமான தொடர்பு, மற்றும் பாதிக்கப்பட்ட பெண் வேறு திருமணம் செய்து கொண்ட காரணத்தால் சாட்சி சொல்ல விருப்பமின்மை போன்ற காரணங்களை அடிப்படையாக கொண்டு சிறுமியை பெற்றோரது பாதுகாப்பில் இருந்து சட்ட ரீதியான அனுமதி இன்றி கடத்திய குற்றத்துக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 6 மாதகால சிறைத்தண்டனையும் 2 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் கட்டத்தவறும் பட்சத்தில் 2 மாத கால கடூழிய சிறையும், பாலியல் வன்புணர்வுகுற்றத்துக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 12 மாத கால சாதாரண சிறையும் 8 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும் கட்டத்தவறின் 8 மாதகால சாதாரண சிறையும் வழங்கி தீர்ப்பளித்ததுடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 20 ஆயிரம் ரூபாய் நட்டஈடும் கட்டத்தவறின் 20 மாதகால சிறைத் தண்டயையும் வழங்கி நீதிபதி தீர்ப்பளித்தார். (ம-9)

## தமிழரின் உரிமை...

அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையைப் பொறுத்தவரையில், மேற்குலக நாடுகளிடமிருந்து கணிசமான தொகை நிதியுதவியைப் பெறுகின்ற ஒரு நாடு என்ற வகையில், இலங்கை தனது ஜனநாயக விழுமியங்களைப் பேணுவதற்கும் மனித உரிமையை மதிப்பதற்கும் முன்னுரிமை வழங்க வேண்டும்.

கனடாவில் ஆட்சியிலுள்ள லிபரல் கட்சி கனடிய தமிழ் மக்களுக்கு கடந்த தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகள் குறித்து போதிய எந்த நடவடிக்கையையும் எடுக்காமலிருப்பது கவலைக்குரியது.

அதனால் தாம் கடந்த வருடம், ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில், இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்த விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கும்படி கனடிய அரசுக்கு பகிரங்க அழுத்தம் கொடுத்தோம் என கூறினார். (ம-3)


தன நிதானய
திகதி 2019-02-08
சீட்டிழுப்பு இலக்கம் 112
S 20 62 68 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/02/2019
சீட்டிழுப்பு இலக்கம் 342
வெற்றி இலக்கங்கள்
O 06 14 18 49 68

கொவிசெத
திகதி 2019.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 2029
வெல்லப்பட்ட இலக்கங்கள்
L 07 23 61 75
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/02/08
சீட்டிழுப்பு இலக்கம் 3851
வெல்லப்பட்ட இலக்கங்கள்
P 8 0 8 0 9 0
தேசிய லொத்தர் சபை

# இலங்கையின் உள்நாட்டு...

துக் கலந்துரையாடினார்.

இதன்போதே அவர், உள்நாட்டு சிக்கல்களை இலங்கை மக்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். உள்நாட்டு விவகாரங்களில் சீனா ஒருபோதும் தலையீடு செய்யாது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நல்ல உறவு இருக்கிறது. 62 ஆண்டுகளாக இடையூறில்லாத உறவுகள் இருந்து வருகினறன. இரண்டு நாடுகளும் இன்னமும் நெருக்கமாக நண்பர்களாகப் பணியாற்றுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)


## ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
### ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

**இருபாலை சந்திக்கு அண்மையில் (கிழக்கு வீதி)**
திருமணத்தடை, புத்திரபாக்கியம் / புத்திரபாக்கியதடை, தொழில் வியாபாரம்தடைகள், வெளிநாட்டுபயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக் குளத்திலும்... (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு – யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய் – வவுனியா) (C-5429)

**தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும் : 076 328 7119**

## அவுஸ்ரேலிய வேலைவாய்ப்பு

**ஐரோப்பிய தயாரிப்பு வாகனங்கள் மற்றும் TOYOTA வாகன ரெக்னீஷியன்**

5 வருட தொழில் அனுபவம்
(மத்திய கிழக்கு உட்பட) ஆங்கில அறிவு அவசியம்

4 வருட Work Permit, 3 வருடங்களில் நிரந்தரக் குடியுரிமைக்கு விண்ணப்பித்து மனைவி, 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை அழைக்கலாம். தினமும் 8 மணி x வாரம் 6 நாள் வேலை. (C-5432)

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

077 00 38 215
021 221 9 221

221- 1/1. மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(7414)

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பணி நிலை வேண்டுகை

### பாதுகாப்பு உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம் மாநாகர சபை எல்லைக்குள், பஸ் நிலையத்தில் இருந்து 1/4km தூரத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு இரவு நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

* கடமை நேரம் – கிழமை நாட்களில் பி.ப 5.10 முதல் மறுநாள் காலை 8.30 மணி வரை
* சனிக்கிழமைகளில் பி.ப 5.10 மணி முதல் திங்கட்கிழமை காலை 8.30 மணிவரை பணிதொடரும். [ஞாயிற்றுக்கிழமைகளில் மேலதிக நேர பணி வழங்கப்படும். (Over Time)
* புகைத்தல், மதுபானம், வெற்றிலை போன்ற பழக்கமுடையவர்கள் இப்பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
* அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* கவர்ச்சிகரமான சம்பளத்திட்டம் [அனைத்துக் கொடுப்பனவு 24900/= வரை பெற்றுக்கொள்ள முடியும்]

12ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்கவும்

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

(C-5422) **தபாற் பெட்டி இல. 168, யாழ்ப்பாணம்.**

## பணியாளர் தேவை

கட்டடப்பொருட்களில் அனுபவம் உள்ள பணியாளர் தேவை.

**சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்**
**இல.55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
(C-5414)

## குறைந்த கட்டணத்துடன் வலைத்தளம் உருவாக்கம்

உங்களின் பாடசாலைகள், வியாபார நிறுவனங்கள், அமைப்புக்கள் ஆகியவற்றிற்கான வலைத்தளங்கள் எங்களின் மூலம் குறைந்த கட்டணத்துடன் உருவாக்கி கொள்ளுங்கள்.

**5999/= இருந்து**
**தொடர்புகளுக்கு :**
**070 305 0007, 021 221 4300**
(7413)

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



(C-5345)

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## மருந்தாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபலமான மருந்தகம் ஒன்றுக்கு Pharmacist உடன் தேவை.

**தொடர்புகளுக்கு :**
**0777323702**
(C-7489)



யாழ்ப்பாணத்தில்

# 1 ஏக்கர், 2 ஏக்கர் கற்பகவனம் 2

## காணிகள் விற்பனைக்கு எழுதுமட்டுவாழ்

உடனடி உறுதி மாற்றம் * வங்கி கடன் வசதி செய்து தரப்படும்

**1 ஏக்கர் – 16 பரப்பு**
- 40 தென்னை
- 40 - 60 தேக்கு
- 20 கஜு மரம்
- 10 - 15 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

**26 இலட்சம்**
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)



**2 ஏக்கர் – 32 பரப்பு**
- 80 தென்னை
- 80 - 90 தேக்கு
- 40 கஜு மரம்
- 20 - 30 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

**49 இலட்சம்**
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

- அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் **5 வருடங்கள் பராமரிப்பு** செய்து தரப்படும்!
- 30 அடி, 15 அடி அகல பாதை
- விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
- 24 மணிநேர பாதுகாப்பு
- விளைபொருட்களுக்கான சந்தை வசதி

(C-5438)

பொதுவான வசதிகள்

பொது விடுதி · உணவகம் · உடற்பயிற்சிக்கூடம் · நீச்சல் தடாகம் · விளையாட்டுத்திடல் · நடைபயிற்சிக்கான பாதை · மீன்பிடி குளம் · முந்திரிகை தோட்டம் · மூலிகைத் தோட்டம்

5 வருட பராமரிப்பு இயற்கை வழியில்
100% ORGANIC



சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778

**551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.